# කාර්ය සාධන වාර්තාව
# செயலாற்றுகை அறிக்கை
# PERFORMANCE REPORT
# 2019

**இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் நிதி, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சின் அரச நிதித் திணைக்களத்தின் ஊடாக சமர்ப்பிக்கப்பட்டது**

**PFD / RED / COPA / 2019 / 01 ஆம் இலக்க 2020.01.30 ஆம் திகதிய வழிகாட்டல்களுக்கிணங்க தயாரிக்கப்பட்டது**

# 1. நிறுவனத்தின் விவரம்/ நிறைவேற்றுப் பொழிப்பு

**1.1** அறிமுகம்

**1.2** இலங்கை மதுவரித் திணைக்களத்தின் தூர நோக்கு, பணிக்கூற்று மற்றும் குறிக்கோள்கள்

**1.2.1** தூர நோக்கு

**1.2.2** பணிக்கூற்று

**1.2.3** குறிக்கோள்கள்

**1.3** இலங்கை மதுவரித் திணைக்களத்தின் பிரதான பணிகள்

**1.4** இலங்கை மதுவரித் திணைக்களத்தின் நிறுவனக் கட்டமைப்பு

**1.5** இலங்கை மதுவரித் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகங்களின் அமைவிட வரைபடம்

## 1.1 அறிமுகம்

இலங்கை மதுவரித் திணைக்களமானது, தற்போது வரை ஏறத்தாழ நூற்றி ஆறு வருட வரலாற்றைக் கொண்டு இலங்கையின் பிரதான அரச வரி வருமானமீட்டும் நிறுவனங்களில் மூன்றாவதாகத் திகழ்கிறது. 1912 இன் 8 ஆம் இலக்க மதுவரிக் கட்டளைச்சட்டம் செயல்வலுப்படுத்தல் 1913 ஜனவரி 01 ஆம் திகதியிலிருந்து செயல்வலுப்படுத்தப்பட்டது.

ஆரம்பத்தில் திணைக்களத் தலைவராக மதுவரி ஆணையாளர் ஒருவர் நியமிக்கப்பட்டதுடன் பின்னர் அப்பதவி மதுவரி ஆணையாளர் நாயகமாக திருத்தஞ் செய்யப்பட்டது. 2019 இல் நிர்வாக மற்றும் மேற்பார்வை உதவிகளின் பொருட்டு மேலதிக மதுவரி ஆணையாளர் நாயகம் ஒருவரும் பதில் மேலதிக மதுவரி ஆணையாளர் நாயகம் ஒருவரும் மதுவரி ஆணையாளர்கள் இருவரும் பிரதான கணக்காளர் ஒருவரும் கணக்காளர்கள் இருவரும் பிரதி மதுவரி ஆணையாளர்கள் 6 பேரும் நிர்வாக உத்தியோகத்தர்கள் இருவரும் சேவை புரிந்தனர்.

மேலும், மதுவரித் தலைமை அலுவலகத்தில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவும் கணக்காய்வாளர் தலைமை அதிபதித் திணைக்களத்தின் கணக்காய்வுப் பிரிவும் தாபிக்கப்பட்டுள்ளது. சகல மாகாணங்களையும் உள்ளடக்கியவாறு 13 உதவி மதுவரி ஆணையாளர் அலுவலகங்கள், 30 மதுவரி அத்தியட்சகர் அலுவலகங்கள், 56 மதுவரி நிலையங்கள், 05 மதுவரி விசேட நடவடிக்கைப் பிரிவுகள், போதைப்பொருள் தடுப்புப் பிரிவு என்பன அடங்கலாக வினைத்திறன் மிக்க விசாலமான நிறுவகமாக நாடு பூராவும் சேவை வழங்குகிறது. அத்துடன் அற்ககோல், சிகரட் உற்பத்தி தொடர்பான உற்பத்திச்சாலைகளில் அமைந்துள்ள 94 மதுவரிப் பிரிவுகளில் மேற்பார்வை பொருட்டு பணியாளர் குழாத்தினர் இணைக்கப்பட்டுள்ளனர்.

மீளாய்வு வருடம் 2019 இல் இத்திணைக்களத்தின் மொத்தப் பணியாளர்களின் எண்ணிக்கை 1326 ஆக இருந்தது. வெற்றிடங்களின் எண்ணிக்கை 216 ஆக உள்ளதுடன் அது அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் எண்ணிக்கையின் 14% ஆகும். இவ்வலுவலர்களின் அர்ப்பணிப்பு மிக்க சேவையானது, திணைக்களம் எதிர்பார்க்கும் நிறைவேற்றுகையை வெற்றிகரமாக எய்துவதற்கான பங்களிப்பை வழங்குகிறது.

மதுவரி, புகையிலை வரி வருமான முகாமை, அதற்கான சட்ட வலுப்படுத்தல் மற்றும் சமூகப் பாதுகாப்பு ஆகிய முத்தரப்பு பெறுபேறுகளை மேற்கொள்ள திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. 2019 இல் திணைக்களம், ரூபா 115.42 பில்லியன் ஐ மதுவரி, புகையிலை வரி வருமானமாக பொதுத் திறைசேரிக்கு சேர்த்துள்ளது. 2019 இல் அறிக்கையிடப்பட்ட மதுவரி மற்றும் புகையிலை வரி பற்றிய வரிப் பொறுப்பாக்கம் ரூபா 119.18 பில்லியனாகும்.

புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட மதுவரிச் செயற்பாட்டுக் கருமபீடமானது, 1913 எனும் தொலைபேசி அழைப்பின் ஊடாக பல்வேறு நிறுவன, பொதுசன முறைப்பாடுகளை உடனடியாக நடவடிக்கை எடுத்தல் மற்றும் முகாமை செய்தல் பொருட்டு அமைக்கப்பட்டுள்ளது.

2019 இல் மதுவரி அலுவலர்களால் நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்ட 47,391 சட்ட விரோத மதுபானங்கள் மற்றும் போதைப்பொருள் சுற்றிவளைப்புகளின் மீத வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு அதன் ஊடாக பெறப்பட்ட தண்டப்பணம் ரூபா 244,015,250.00 ஆகும். போதைப்பொருள் தடுப்புப் பிரிவினால் 109 கிலோ கிராம் அளவிலான போதைப்பொருள்(ஹெரோயின்) கைப்பற்றப்பட்டமை அவற்றில் குறிப்பிடத்தக்கதொரு சுற்றிவளைப்பாகும்.

இவ்வெற்றிகரமான அரசபணியை மேற்கொள்வதற்கு நிதி அமைச்சு மற்றும் திறைசேரியின் இயைபுடைய சகல அலுவலர்கள், இலங்கை பொலிஸ், இலங்கை சுங்கம், உள்நாட்டு இறைவரித் திணைக்களம், சுற்றுலாத்துறை அதிகாரசபை, தேசிய அபாயகர அவுடதங்கள் கட்டுப்பாட்டு சபை, புகையிலை மற்றும் அற்ககோல் சம்பந்தமான தேசிய அதிகாரசபை, சட்டமாஅதிபதித்

திணைக்களம் அடங்கலாக சகல நிறுவனங்களும் இலங்கை மதுவரித் திணைக்களத்திற்கு வழங்கிய ஒத்துழைப்பிற்காக மிகவும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

2019 இல் எதிர்பார்க்கப்பட்ட நிறுவனம்சார் நிறைவேற்றுகை மட்டத்தை எய்துவதற்கு வழங்கிய ஒத்துழைப்பின் பொருட்டு மதுவரித் திணைக்களத்தின் சகல அலுவலர்களிற்கும் எனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏ.போதரகம
மதுவரி ஆணையாளர் நாயகம்

## 1.2 இலங்கை மதுவரித் திணைக்களத்தின் தூர நோக்கு, பணிக்கூற்று மற்றும் குறிக்கோள்கள்

### 1.2.1 தூர நோக்கு

இலங்கையினுள் சட்டவிரோத மதுபானங்கள் மற்றும் போதைப்பொருள்கள் அற்ற ஆரோக்கியமான சமுதாயமொன்றைக் கட்டியெழுப்புவதற்கு பங்களிப்புசெய்தல்.

### 1.2.2 பணிக்கூற்று

இலங்கையில் மதுபான, புகையிலை கைத்தொழில்களை வினைத்திறனாக நிருவகிப்பதன் மூலம் வருமானத்தை சேகரித்தல், இத்தகைய கைத்தொழில்களில் சட்டவிரோத உற்பத்திகளைத் தடுத்தல், இலங்கையின் அபிவிருத்திக்கும் சமூக நலனோம்பலுக்கும் பங்களிப்புச் செய்தல், நஞ்சுகள், அபின், அபாயகரமான அவுடதங்கள் கட்டளைச் சட்டத்தினை அமுல்படுத்துவதன் மூலம் சமூக பாதுகாப்பினை வழங்குதல்.

### 1.2.3 குறிக்கோள்கள்

இலங்கை மதுவரித் திணைக்களத்தின் சகல செயல் நோக்குகளையும் நிறைவேற்றும் நோக்கில் பின்வரும் குறிக்கோள்களை எய்துதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அ. அற்ககோல் மற்றும் புகையிலையிலிருந்து கிடைக்கின்ற வருமானத்தை பாதுகாத்துக் கொள்ளல்.

ஆ. மதுவரிக் கட்டளைச் சட்டத்தினையும் புகையிலை வரிச் சட்டத்தினையும் அமுல் படுத்துதலின் ஊடாக எதிர்பார்த்த வரி வருமானத்தை திறைசேரிக்கு வழங்கல்.

இ. நஞ்சுகள், அபின், அபாயகரமான அவுடதங்கள் கட்டளைச் சட்டத்தினை அமுல்படுத்துதலின் ஊடாக நாடு முழுவதும் பாதுகாப்பை ஏற்படுத்தல்

ஈ. புகையிலை மற்றும் அற்ககோல் மீதான தேசிய அதிகாரச் சபைச் சட்டத்தினை அமுல்படுத்துதலின் ஊடாக சமுகத்தைப் பாதுகாத்தலும் அதற்கான சட்ட வலுப்படுத்தலும்

## 1.3 இலங்கை மதுவரித் திணைக்களத்தின் பிரதான பணிகள்

மேற்படி குறிக்கோள்களை எய்தப்பெறும் நோக்கில் இலங்கை மதுவரித் திணைக்களம் பின்வரும் செயற்பாடுகளை மேற்கொள்கிறது.

அ. நாடு முழுவதும் அமைந்துள்ள உரிமம் பெற்ற நிலையங்களை மேற்பார்வையிடுதல், கட்டுப்படுத்தல் மற்றும் அவற்றிலிருந்து கிடைக்க வேண்டிய வருமானத்தை சேகரித்தல்.

ஆ. மதுவரிக் கட்டளைச் சட்டம் தொடர்பில் சட்டத்தை அமுல்படுத்தும் முகவரதிகாரியாக செயலாற்றுதல் ஊடாக சட்டத்தை நாடு முழுதும் செயற்படுத்தல்


இ. புகையிலைக் கைத்தொழில் மேற்பார்வையிடுதல், கட்டுப்படுத்தல் அடங்கலாக புகையிலை வரிச் சட்டத்தை அமுல்படுத்துதலின் ஊடாக அத்துறைகளிலிருந்து சேகரிக்கப்படும் வரி வருமானத்தை சேகரித்தற்கு நடவடிக்கை எடுத்தல்

ஈ. நஞ்சுகள், அபின், அபாயகரமான அவுடதங்கள் கட்டளைச் சட்டத்தினை அமுல்படுத்தும் முகவரதிகாரியாக செயலாற்றுதல் மூலமாக சமுகப் பாதுகாப்பை மேம்படுத்தல்


உ. புகையிலை மற்றும் அற்ககோல் மீதான தேசிய அதிகார சபைச் சட்டத்தினை அமுல்படுத்துதல் ஊடாக சமூகப் பாதுகாப்பை ஏற்படுத்தல்

ஊ. இயைபுடைய ஏனைய திணைக்களங்கள், நிறுவனங்களுடன் இணைந்து பணிகளை மேற்கொள்வதன் ஊடாக சமூகப் பாதுகாப்பையும் திணைக்களத்தின் செயல்நோக்கையும் மேற்கொள்ளும் பொருட்டு அவர்களது ஒத்துழைப்பு மற்றும் பங்களிப்பைப் பெற்றுக்கொள்ளுதல்.

## 1.4 இலங்கை மதுவரித் திணைக்களத்தின் நிறுவனக் கட்டமைப்பு



## 1.5 மதுவரித் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகங்களின் அமைவிடம்



அத்தியாயம் 02

# 2. முன்னேற்றம் மற்றும் எதிர்கால கண்ணோட்டம்

**2.1** சிறப்பு அடைவுகள்

**2.1.1** வருமானம்

**2.1.2** குற்றம்

**2.1.3** ஆதரவளிப்பு

**2.1.4** புதிய பிரிவுகளைத் தாபித்தல்

**2.2** சவால்கள் - எதிர்கால இலக்குகள்

**2.3** நலன்புரி

## 2.1 சிறப்பு அடைவுகள்

### 2.1.1 வருமானம்

- இலங்கை மதுவரித் திணைக்களம் 2019 இல் மதுவரி வருமானமாக 115,384,226,735.65 ரூபாவையும் புகையிலை வரி வருமானமாக ரூபா 32,801,536.08 ஐயும் சேகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. அது 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மதுபானத்தின் பொருட்டு 1% அதிகரிப்பு ஏற்பட்டது. எனினும் புகையிலை பொருட்டு 28% குறைவு ஏற்பட்டது.
- 2019 இல் அறிக்கையிடப்பட்ட மதுவரி மற்றும் புகையிலை வரி பற்றிய வரிப் பொறுப்பாக்கம் ரூபா 119.18 பில்லியனாகும்.
- மதுபான உற்பத்திகளுக்கு ஃபூல் புரூப்ஃ ஸ்ரிக்கர்களை அறிமுகப்படுத்தலின் ஊடாக இலங்கையினுள் இறக்குமதி செய்யப்படும் வெளிநாட்டு மதுபானங்களில் ஏற்படும் வரி ஏய்ப்பினாலான சட்ட விரோத செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த இயலுமாகவிருந்தது. இப்பாதுகாப்பு ஸ்ரிக்கர்களை உள்நாட்டு மதுபான உற்பத்தி பொருட்டும் அறிமுகஞ் செய்யப்பட்டது.
- ஃபூல் புரூப்ஃ ஸ்ரிக்கர் வேலைத்திட்டம் செயற்படுத்துதல் 2019 .06 .20 ஆம் திகதிய 2128/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியினால் வெளியிடப்பட்டது.
- வரி கணிக்கும் கணனி மென்பொருள் தயாரிக்கப்பட்டு அது செயற்படுத்தப்பட்டது.
- 2019 இல் இலங்கை மதுவரித் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட சகல உரிமங்கள் பற்றியும் எதிர்காலத்தில் வெளியிடப்படவுள்ள சகல உரிமங்கள் பற்றியும் திணைக்கள இணையத்தில் இற்றைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- புகையிலைக் கைத்தொழிலை ஒழுங்குபடுத்தல், அதன் வரி அறவிடும் முறைமையைத் தயாரிக்கும் ஆரம்ப நடவடிக்கையாக புகையிலை உற்பத்திகளான பீடி, சுருட்டு தொடர்பான உற்பத்தித் தகவல்களை கணனிப்படுத்தலும் பதிவு செய்தலும்.

### 2.1.2 குற்றங்கள்

- 2019 இலே இலங்கை மதுவரித் திணைக்களத்தின் 106 வருட வரலாற்றில் மேற்கொள்ளப்பட்ட மிகப்பெரிய ஹெரோயின் சுற்றிவளைப்பான 109 கிலோ கிராம் ஹெரோயின் கொழும்பு பிலியந்தல பிரதேசத்தில் மூன்று சந்தேகநபர்களுடன் கைப்பற்றப்பட்டது. அவ்வாறு நாடு முழுவதும் 47,391 சட்ட விரோத மதுபான, போதைப்பொருள் சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அங்கு பெறப்பட்ட நீதிமன்ற தண்டப்பணம் ரூ. 244,015,250.00 ஆகும்.
- நாடு முழுவதும் உள்ள மதுவரி உரிம நிலையங்களில் மேற்கொள்ளப்படும் முழுமையான மேற்பார்வை மற்றும் நிர்வாகத்தின் ஊடாக உரிம நிபந்தனைகளை மீறுதல் தொடர்பான 4,244 தொழில்நுட்பக் குற்ற அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டதன் மூலம் அரசிற்கு கூட்டுத்தண்டப்பணம் ரூ. 186,291,725.27 இனைப் பெற்றுக்கொள்ள முடிந்தமை.
- பொதுமக்களுடன் நெருக்கமாக பணியாற்றும் பொருட்டு பொதுசன முறைப்பாடுகளிற்கு முக்கியத்துவம் வழங்கலிற்காக விசேட தொலைபேசி இல. 1913 இனை 24 மணி நேரமும் செயற்படும் வகையில் விசேட செயற்பாட்டுக் கருமபீடம் ஒன்று தலைமை அலுவலகத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

### 2.1.3 ஆதரவளிப்பு

- இலங்கை மதுவரித் திணைக்களத்திற்கு 2019 இல் புதிதாக 19 கப் வாகனங்களும் கார் ஒன்றும் கொள்வனவு செய்யப்பட்டது. அதற்கு மேலதிகமாக சிலாபம், பூகொடை, முல்லைத்தீவு, பருத்தித்துறை ஆகிய பிரதேசங்களில் புதிய கட்டட நிர்மாணங்களும் ஆரம்பிக்கப்பட்டது.

### 2.1.4 புதிய பிரிவுகளைத் தாபித்தல்

- இலங்கை மதுவரித் திணைக்களத்தில் அரச கணக்குகள் பற்றிய குழுவின் அறிவுறுத்தலின் பிரகாரம் சட்டப் பிரிவும் ஆராய்ச்சி மற்றும் கற்கைகள் பிரிவும் ஸ்தாபிக்கப்பட்டது.

## 2.2 சவால்கள் - எதிர்கால இலக்குகள்

- இலங்கை மதுவரித் திணைக்களத்தின் அலுவலர்கள் நாடு முழுவதும் 5000 பேர் வரையில் அதிகரிக்கப்பட்டுள்ளமை.
- நாடு முழுவதும் அமைந்துள்ள சகல விசேட நடவடிக்கைப் பிரிவுகள், பிராந்திய அலுவலகங்கள், நிர்வாக அலுவலகங்களிற்குத் தேவையான வாகனங்கள், கட்டடங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்.
- இலங்கை மதுவரித் திணைக்களத்திற்கு அவசர நடமாடும் அழைப்புத் தொடர்பாடல் உபகரணங்கள் வழங்குதல் மற்றும் தொடர்பாடல் நிலையங்களை ஸ்தாபித்தல்.
- அந்நேரத்து மேற்பார்வைச் செயற்பாடு பொருட்டு நாடு முழுவதும் உள்ள மதுவரித் திணைக்களத்தின் சகல உற்பத்திச்சாலைகளையும் மதுவரித் திணைக்களத்துடன் வலையமைப்புச் செய்தல்.
- இலங்கை சுங்கம், உள்நாட்டு இறைவரித் திணைக்களம், மதுவரித் திணைக்களம் என்பவற்றிற்கிடையே தகவல் வலையமைப்பை ஏற்படுத்தும் பொருட்டு இடைமுகங்களை ஸ்தாபித்தல்.
- அற்ககோல் தொடர்பான உற்பத்திச் செயன்முறை மற்றும் தர மேம்பாடு என்பன பொருட்டு மதுவரித் திணைக்களத்தில் இரசாயனப் பகுப்பாய்வு கூடத்தை அமைத்தல்
- தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள், சேவைகளை கொள்வனவு செய்கையில் பெறுகைச் செயற்பாட்டை கைக்கொள்ளல்.
- திணைக்களத்தில் பிரேரிக்கப்பட்ட வருமான முகாமை முறை (ERMS) யை ஸ்தாபித்தல்
- சகல அலுவலர்களுக்கும் போதியளவு தகவல் தொழில்நுட்ப அறிவை வழங்குதல்.
- வினைத்திறன் மிக்க சேவை பொருட்டு திணைக்களம்சார் அலுவலர்களிற்கு புதிய சேவைப் பிரமாணங்களை அறிமுகஞ் செய்தல்
- மதுவரி சட்ட, ஒழுங்குவிதிகளினை காலத்தோடொத்த, எதிர்கால தேவைகளின் நோக்கில் பொருத்தமானவாறு இற்றைப்படுத்தல்

## 2.3 நலன்புரி

- இலங்கை மதுவரித் திணைக்களத்தில் நலன்புரிச் சங்கத்தை மீளவும் ஆரம்பித்தல்
- அலுவலர்களின் பொருட்டு முழுமையான சிற்றுண்டிச்சாலை ஒன்றைத் திறந்து வைத்தல்
- நூலகத்தை ஸ்தாபித்தல்

# 3. வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை

**3.1** நிதிச் செயலாற்றுகைக் கூற்று

**3.2** நிதிச் செயலாற்றுகைக் கூற்று - வெகுமதி நிதியம்

**3.3** நிதி நிலைமை பற்றிய கூற்று

**3.4** நிதிப் பாய்ச்சல் பற்றிய கூற்று

**3.5** நிதியியற் கூற்றுக் குறிப்புகள்

**3.6** வருமானம் சேகரித்தற் செயலாற்றுகை

**3.7** ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை

**3.8** நி.ஒ.**208** இன் பிரகாரம் ஏனைய அமைச்சுகள்/ திணைக்களங்களின் முகவராக இத்திணைக்களம்/ மாவட்ட செயலகம்/ மாகாண சபைக்கான செலவினத்திற்கான ஒதுக்கீடு

**3.9** நிதியல்லாச் சொத்துகளை அறிக்கையிடலின் செயலாற்றுகை

**3.10** கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

# 3.1 நிதிச் செயலாற்றுகைக் கூற்று

ஏசிஏ-எப்∴.

**2019 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்தின் பொருட்டு**
**நிதிச் செயலாற்றுகைக் கூற்று**

ரூ.

| பாதீடு 2019 | | குறிப்பு | உண்மை நிலை 2,019.00 | 2018 | |
|---|---|---|---|---|---|
| 135,000,000,000.00 | **வருமானம் பெறுகை** | | 115,417,028,272.00 | 113,934,799,217.00 | |
| - | வருமான வரி | 1 | 115,417,028,272.00 | 113,934,799,217.00 | |
| - | உள்நாட்டு பொருட்கள், சேவைகள் மீதான வரி | 2 | - | - | ஏசிஏ-1 |
| - | சர்வதேச வர்த்தகம் மீதான வரி | 3 | - | - | |
| - | வரியில்லாத வருமானம், ஏனையவை | 4 | - | - | |
| **135,000,000,000.00** | **மொத்த வருமான பெறுகை (அ)** | | **115,417,028,272.00** | **113,934,799,217.00** | |
| - | **வருமானமில்லாத பெறுகை** | | - | - | |
| - | திறைசேரிக் கட்டுநிதி | | 752,175,000.00 | 549,212,000.00 | ஏசிஏ-3 |
| - | வைப்பு | | 299,009,574.00 | 226,519,053.00 | ஏசிஏ-4 |
| - | முற்பணக் கணக்கு | | 50,529,077.00 | 45,348,437.00 | ஏசிஏ-5∴5(ஏ)/5(பி) |
| - | ஏனைய பெறுகை | | 104,592,121.00 | 86,939,142.00 | |
| - | **மொத்த வருமானமில்லாத பெறுகை (ஆ)** | | **1,206,305,772.00** | 908,018,632.00 | |
| **135,000,000,000.00** | **மொத்த வருமானப் பெறுகையும் வருமானமல்லாத பெறுகையும் இ = (அ)+(ஆ)** | | **116,623,334,044.00** | **114,842,817,849.00** | |
| | **கழி : செலவு** | | | | |
| - | **மீண்டெழும் செலவினம்** | | - | - | |
| 724,200,000.00 | சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள் | 5 | 723,371,911.00 | 665,232,580.00 | |
| 435,600,000.00 | ஏனைய பொருட்கள் சேவைகள் | 6 | 205,020,444.00 | 131,670,737.00 | ஏசிஏ-2(ii) |
| 8,700,000.00 | மானியங்கள், கொடைகள மற்றும் மாற்றல்கள் | 7 | 8,409,221.00 | - | |
| - | வட்டிக் கொடுப்பனவுகள் | 8 | - | - | |
| - | ஏனைய மீண்டுவரும் செலவினம் | 9 | - | 20,782,138.00 | |
| **1,168,500,000.00** | **மொத்த மீண்டுவரும் செலவினம் (ஈ)** | | **936,801,576.00** | **817,685,455.00** | |
| | **மூலதனச் செலவினம்** | | | | |
| 7,000,000.00 | மூலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும் | 10 | 6,288,020.00 | 24,177,899.00 | |
| 293,500,000.00 | மூலதனச் சொத்துக்களைக் கையகப்படுத்தல் | 11 | 94,056,258.00 | 146,211,941.00 | |
| - | மூலதன மாற்றல்கள் | 12 | - | - | ஏசிஏ-2(ii) |
| - | நிதிச் சொத்துக்களின் கொள்வனவு | 13 | - | - | |
| 24,500,000.00 | கொள்ளளவைக் கட்டியெழுப்புதல் | 14 | 9,670,775.00 | 13,396,581.00 | |
| - | ஏனைய மூலதனச் செலவினங்கள் | 15 | - | - | |
| **325,000,000.00** | **மொத்த மூலதனம் செலவினம் (உ)** | | **110,015,053.00** | **183,786,421.00** | |
| | **பிரதான பேரேட்டுச் செலவினம் (ஊ)** | | **115,650,132,007.00** | **113,981,211,351.00** | |
| | **வைப்புக் கொடுப்பனவுகள்** | | 531,522,103.00 | 170,785,916.00 | ஏசிஏ-4 |
| | செலுத்துகைகள் | | 115,059,294,194.00 | 113,741,682,208.00 | ஏசிஏ-5/5(ஏ)/5(பி) |
| | **முற்பணக் கொடுப்பனவுகள்** | | 59,315,710.00 | 68,743,227.00 | |
| | **மொத்த செலவினம் எ = (ஈ + உ + ஊ)** | | **116,696,948,636.00** | **114,982,683,227.00** | |
| - | **2019 டிசம்பர் 31ல் உள்ளவாறான கட்டுநிதி மீதி ஏ=(இ-எ)** | | (73,614,590.00) | (139,865,419.00) | |
| | **கட்டுநிதி சீராக்கல்கள்** | | | | |
| | **கூட்டு** | | | | |
| | நி.ஒ. 208 இன் படி ஏனைய அமைச்சுகள்/ திணைக்களங்களின் செலவினம் | | 46,550,631.00 | 1,332,120 | |
| | கட்டுநிதிக் கணக்கு பற்று வேறுபாடு சீராக்கல் | | 29,735,446.00 | 88,602,223 | |
| | கட்டுநிதிக் கணக்கு வரவு வேறுபாடு சீராக்கல் | | 45,475,137.00 | 166,967,044.00 | |
| | முற்பணம் பி கணக்கு வேறுபாடு சீராக்கல் | | 1,002,414.00 | | |
| | **சீராக்கல்களின் மொத்தம்** | | **122,763,628.00** | **256,901,387** | |
| | **கழி** | | | | |
| | நி.ஒ. 208 இன் படி ஏனைய அமைச்சுகள்/ திணைக்களங்களின் செலவினம் | | 5,436,061.00 | 12,000.00 | |
| | **சீராக்கல்களின் மொத்தம்** | | **5,436,061.00** | **12,000.00** | |
| | **2019 டிசம்பர் 31ல் உள்ளவாறான சீராக்கல்களின் பின்பான கட்டுநிதி மீதி** | | **43,712,977.00** | **117,023,968.00** | |

## 3.2 நிதிச் செயலாற்றுகைக் கூற்று – வெகுமதி நிதியம்

**இலங்கை மதுவரித் திணைக்களம் - மதுவரி வெகுமதி நிதியம்**

**2019 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று**

**(ரூபாவில்)**

| | 2019 | 2018 |
|---|---|---|
| <u>வருமானம்</u> | | |
| கூட்டுத் தண்டப்பணப் பெறுகை | 181,849,475.27 | 171,783,252.65 |
| சிகரட் தண்டப்பணம் | 4,442,250.00 | 6,091,950.00 |
| பெறவேண்டிய கூட்டுத் தண்டப்பணம் | 54,577,283.55 | - |
| பெறவேண்டிய சிகரட் தண்டப்பணம் | 871,100.00 | - |
| **மொத்த வருமானம்** | **241,740,108.82** | **177,875,202.65** |
| | | |
| <u>செலவினம்</u> | | |
| வெகுமதி நிதியக் கொடுப்பனவு | 363,518,332.51 | 101,516,517.95 |
| அரசிறை வருமானத்திற்கு செலுத்துகை - மொத்த வருமானம் 15 % | 27,277,421.29 | 25,767,487.90 |
| அரசிறை வருமானத்திற்கு செலுத்துகை - சிகரட் தண்டப்பணம் 75 % | 3,331,687.50 | 4,568,962.50 |
| புகையிலை வெகுமதி நிதியத்திற்கு செலுத்த வேண்டிய தொகை | 1,110,562.50 | 1,522,987.50 |
| விசேட சுற்றிவளைப்புகள் | 210,000.00 | - |
| பயிற்சி, கற்கை நடவடிக்கைகளிற்கான கொடுப்பனவு | - | - |
| விளையாட்டு, கேளிக்கை, கல்வி நடவடிக்கைகள் | - | - |
| மதிப்பிறக்கம் ( அட்டவணை 01) | 6,601,350.14 | 5,497,331.02 |
| உரிமதாரர்களிற்கு மீள கொடுப்பனவு | 102,000.00 | - |
| மொத்த வருமானத்தின் பற்றாக்குறைத் தொகை | - | 2,242,887.74 |
| **மொத்தச் செலவினம்** | **402,151,353.94** | **141,116,174.61** |
| | | |
| **(குறை ) / மிகை** | **(160,411,245.12)** | **36,759,028.04** |

தயாரித்தவர் ..................................

பரிசீலித்தவர் ..................................

..............................................

எம்.என்.பி.பெர்னாண்டோ

பிரதம கணக்காளர்

එම්.එන්. ප්‍රියංගිකා ප්‍රනාන්දු
ප්‍රධාන ගණකාධිකාරී
ශ්‍රී ලංකා සුරාබදු දෙපාර්තමේන්තුව
නො: 353, කෝට්ටේ පාර,
රාජගිරිය.

## 3.3 நிதி நிலைமை பற்றிய கூற்று

ஏசீஏ -பி

2019 டிசம்பர் 31ல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

| | குறிப்பு | உண்மை நிலை<br>2019<br>ரூ. | <br>2018<br>ரூ. |
|---|---|---|---|
| <u>நிதி அல்லாத சொத்து</u> | | | |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம் | ஏசிஏ-6 | 1,371,338,801.00 | 1,659,059,552.00 |
| <u>நிதி சொத்துக்கள்</u> | | | |
| முற்பணக் கணக்குகள் | ஏசிஏ-5/5(ஏ) | 177,607,948.00 | 163,631,147.00 |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை | ஏசிஏ-3 | 43,712,977.00 | 117,023,968.00 |
| **மொத்த சொத்துக்கள்** | | **1,592,659,726.00** | **1,939,714,667.00** |
| <u>தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு</u> | | | |
| தேறிய சொத்துகள் | | (167,943,085.00) | (414,432,414.43) |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம் | | 1,371,338,801.00 | 1,659,059,552.00 |
| வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம் | ஏசிஏ-5(பி) | | |
| <u>நடைமுறைப் பொறுப்புக்கள்</u> | | | |
| வைப்பக் கணக்குகள் | ஏசிஏ-4 | 345,551,033.00 | 578,063,561.43 |
| கட்டுநிதி மீதி | ஏசிஏ-3 | 43,712,977.00 | 117,023,968.00 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **1,592,659,726.00** | **1,939,714,667.00** |

-

பக்க இலக்கம் 05 முதல் 42 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 6 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின் பக்க இலக்கம் 43 முதல் 59 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

………………………………
பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்

பெயர் : எஸ்.ஆர்.ஆட்டிகல

பதவி: செயலாளர்

திகதி : 2020.02. 28

එස්. ආර්. ආටිගල
මහා භාණ්ඩාගාරයේ ලේකම් සහ
මුදල්, ආර්ථික හා ප්‍රතිපත්ති සංවර්ධන අමාත්‍යාංශයේ ලේ
මුදල්, ආර්ථික හා ප්‍රතිපත්ති සංවර්ධන අමාත්‍යාංශ
මහලේකම් කාර්යාලය
කොළඹ 01

………………………………
கணக்கீட்டு
உத்தியோகத்தர்
பெயர் :
ஏ.போதரகம
பதவி: மதுவரி ஆணையாளர் நாயகம்

திகதி : 2020.02. 25

ඒ. බෝදරගම
සුරාබදු කොමසාරිස් ජනරාල්
ශ්‍රී ලංකා සුරාබදු දෙපාර්තමේන්තුව
අංක 353, කෝට්ටේ පාර
රාජගිරිය.

………………………………
பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர்/ பணிப்பாளர்(நிதி)

பெயர்: எம்.என்.பி.பெர்னான்டோ

திகதி : 2020.02. 24

එම්.එන්. ප්‍රියංගිකා ප්‍රනාන්දු
ප්‍රධාන ගණකාධිකාරී
ශ්‍රී ලංකා සුරාබදු දෙපාර්තමේන්තුව
නො: 353, කෝට්ටේ පාර,
රාජගිරිය.

# 3.4 நிதிப் பாய்ச்சல் பற்றிய கூற்று

ஏசிஏ-சி

2019 டிசம்பர் 31ல் உள்ளவாறான
நிதிப் பாய்ச்சற் கூற்று

| | உண்மை 2019 ரூ. | உண்மை 2018 ரூ. |
|---|---|---|
| <u>தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்</u> | | |
| மொத்த வரிப் பெறுகைகள் | 115,417,028,272.00 | 113,934,799,217.00 |
| கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள் | 104,592,121.00 | 86,939,142.00 |
| இலாபம் | - | - |
| வருமானம் அல்லாத பெறுகைகள் | 75,210,583.00 | 255,569,267.00 |
| ஏனைய திணைக்களங்களின்∴ அமைச்சுக்களின் மூலம் திரட்டப்படுகின்ற வருமானம் | - | - |
| கிடைக்கப்பெற்ற கட்டுநிதி | 752,175,000.00 | 549,212,000.00 |
| **செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)** | **116,349,005,976.00** | **114,826,519,626.00** |
| <u>கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு</u> | | |
| ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடடுக் கொடுப்பனவுகள் | 935,818,716.00 | 665,232,580.00 |
| மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும் | - | 152,452,875.00 |
| ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் | 5,436,061.00 | 12,000.00 |
| திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட கட்டுநிதி | 115,059,294,194.00 | 113,741,682,208.00 |
| தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ) | **116,000,548,971.00** | **114,559,379,663.00** |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)** | **348,457,005.00** | **267,139,963.00** |
| <u>முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்</u> | | |
| வட்டி | - | - |
| பங்கு இலாபம் | - | - |
| உரித்து அகற்றல் ஏற்பாடு, பௌதீகச் சொத்துகளின் விற்பனை | - | - |
| உபகரணங்களிலிருந்து அறவிடப்பட்டவை | - | - |
| முற்பணங்களிலிருந்து அறவிடப்பட்டவை | 44,049,500.00 | 36,442,370.00 |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)** | **44,049,500.00** | **36,442,370.00** |
| <u>கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:</u> | | |
| கொள்வனவு அல்லது பௌதீகச் சொத்தக்களின் நிர்மாணிப்பு மற்றும் ஏனைய முதலீடுகளின் கொள்வனவு | 64,447,282.00 | 167,909,094.00 |
| முற்பணக் கொடுப்பனவுகள் | 51,833,719.00 | 59,837,200.00 |
| **முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)** | **116,281,001.00** | **227,746,294.00** |
| **முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)** | **(72,231,501.00)** | **(191,303,924.00)** |
| **தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ-ஊ)** | **276,225,504.00** | **75,836,039.00** |
| <u>நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்</u> | | |
| உள்ளூர்க் கடன்கள் | - | - |
| வெளிநாட்டுக் கடன்கள் | - | - |
| பெற்ற நன்கொடைகள் | - | - |
| கிடைக்கப்பெற்ற வைப்புகள் | 299,009,574.00 | 226,519,053.00 |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)** | **299,009,574.00** | **226,519,053.00** |
| <u>கழி - பகிர்ந்நதளிக்கப்பட்ட காசு:</u> | | |
| உள்ளூர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| வெளிநாட்டுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| வைப்புகளின் கொடுப்பனவு | 531,522,103.00 | 185,331,126.00 |
| **நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)** | **531,522,103.00** | **185,331,126.00** |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஓ)=(ஏ)-(ஐ)** | **(232,512,527.00)** | **41,187,929.00** |
| **காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ) -(ஓ)** | **43,712,977.00** | **117,023,968.00** |
| **ஜனவரி 01 ஆம் திகதியன்று ஆரம்பக் காசு மீதி** | **-** | **-** |
| **டிசம்பர் 31ஆம் திகதியீலுள்ளவாறான இறுதிக் காசு மீதி** | **43,712,977.00** | **117,023,968.00** |

## 3.5 நிதியியற் கூற்றுக் குறிப்புகள்

## 3.6 வருமானம் சேகரித்தற் செயலாற்றுகை

| வருமானக் குறியீடு | வருமானக் குறியீட்டு விபரம் | வருமான மதிப்பீடு | | சேகரிக்கப்பட்ட வருமானம் | |
|---|---|---|---|---|---|
| | | அசல் மதிப்பீடு | இறுதி மதிப்பீடு | தொகை (ரூ.) | இறுதி வருமான மதிப்பீடு % இல் |
| 1002.0.4.0.1.0 | மதுபானம் | 135,000,000,000.00 | 135,000,000,000.00 | 115,384,226,735.65 | 85.47% |
| 1002.0.6.0.0.0 | புகையிலை வரி | 45,000,000.00 | 45,000,000.00 | 32,801,536.08 | 72.89% |
| 2002.0.1.0.1.0 | அரச கட்டடங்களின் வாடகை | 740,000.00 | 740,000.00 | 590,761.44 | 79.83% |
| 2002.0.2.0.99.0 | ஏனைய வட்டி | 6,000,000.00 | 6,000,000.00 | 6,904,577.45 | 115.07% |
| 2003.0.1.0.0.0 | திணைக்கள விற்பனை | 2,800,000.00 | 2,800,000.00 | 1,323,590.00 | 47.27% |
| 2003.0.2.0.99.0 | நானாவித | 20,000,000.00 | 20,000,000.00 | 61,666,038.00 | 308.3% |
| 2004.0.1.0.0.0 | சமூகப் பாதுகாப்புப் பங்களிப்பு நிதி – மத்திய அரசாங்கம் | - | - | 34,107,115.10 | - |

## 3.7 ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை

| ஒதுக்கீட்டு வகை | ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடு | | உண்மைச் செலவினம் | பயன்படுத்தப்பட்ட ஏற்பாட்டை இறுதி ஏற்பாட்டுத் தொகையின் % ஆக |
|---|---|---|---|---|
| | அசல் ஏற்பாடு | இறுதி ஏற்பாடு | | |
| **மீண்டெழும்** | 1,168,500,000.00 | 1,168,500,000.00 | 936,801,576.00 | 80.17% |
| **மூலதனம்** | 311,000,000.00 | 325,500,000.00 | 110,015,053.00 | 45.87% |

## 3.8 நி.ஒ.208 இன் பிரகாரம் ஏனைய அமைச்சுகள்/ திணைக்களங்களின் முகவராக இத்திணைக்களம்/ மாவட்ட செயலகம்/ மாகாண சபைக்கான செலவினத்திற்கான ஒதுக்கீடு

| தொடரில. | ஒதுக்கீடு செய்யப்பட்ட அமைச்சு/ திணைக்களம் | ஏற்பாட்டின் நோக்கம் | ஏற்பாடு | | உண்மைச் செலவினம் | பயன்படுத்தப்பட்ட ஏற்பாட்டை பெறப்பட்ட இறுதி ஏற்பாட்டின் % ஆக |
|---|---|---|---|---|---|---|
| | | | அசல் ஏற்பாடு | இறுதி ஏற்பாடு | | |
| **01.** | கட்டடத் திணைக்களம் | கட்டட நிர்மாணம் | 92,970,213.13 | 92,970,213.13 | 26,412,083.04 | 29.68% |
| **02.** | மாவட்ட செயலகம் கம்பஹா | கட்டட நிர்மாணம் | 30,640,001.87 | 30,640,001.87 | 18,397,985.73 | 60.04% |

## 3.9 நிதியல்லாச் சொத்துகளை அறிக்கையிடலின் செயலாற்றுகை

| சொத்துக்களின் குறியீடு | குறியீட்டு விபரம் | 31.12.2019 திகதிய பொருட் கணக்கெடுப்பு அறிக்கையின் பிரகாரம் மீதி | 31.12.2019 திகதிய நிதி நிலை அறிக்கையின் பிரகாரம் மீதி | எதிர்காலத்தில் கணக்கிட வேண்டியவை | வளர்ச்சி % ஆக அறிக்கையிடல் |
|---|---|---|---|---|---|
| 9151 | கட்டடங்களும் அமைப்புகளும் | 348,253,187.68 | 348,253,187.68 | | 100% |
| 9152 | இயந்திர உபகரணங்கள் | 636,519,000.42 | 636,519,000.42 | | 100% |
| 9153 | காணிகள் | 184,800,000.00 | 184,800,000.00 | | 100% |
| 9154 | தொட்டுணர முடியாத சொத்துகள் | - | - | | |
| 9155 | உயிரியல் சொத்துகள் | - | - | | |
| 9160 | நடைபெறும் பணிகள் | 174,869,318.22 | 174,869,318.22 | | 100% |
| 9180 | குத்தகைக்கு விடப்பட்ட சொத்துகள் | | | 3,134,268.28 | |

## 3.10 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

பியூஆர்/ஈ/ஈஎக்ஸ்டீ/2019/எப்ஏ 2020 யூன்

கணக்கீட்டு உத்தியோகத்தர்
மதுவரித் திணைக்களம்.

இலங்கை மதுவரித் திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்க அறிக்கை

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை மதுவரித் திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் சுற்று என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் இலங்கை மதுவரித் திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் உறுப்புரையின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும்.

எனது அறிக்கையில் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர்த்து, 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட இந்நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் மதுவரித் திணைக்களத்தின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றுகை மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையைத் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகள் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு அலுவலகரின் மற்றும் கணக்கீட்டு அலுவலகரின் பொறுப்புக்கள்**

---

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் முன்னளிக்கப்படும் வகையில் 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடி அல்லது தவறின் காரணமாக ஏற்பட முடியுமான பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டுத் தீர்மானங்களை எடுப்பது கணக்கீட்டு அலுவலகரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக பயனுள்ள உள்ளக கட்டுப்பாட்டுத் தொகுதியொன்றினை உருவாக்கிப் பேணிச் செல்லப்படுவதாகப் பிரதான கணக்கீட்டு அலுவலகர் மற்றும் கணக்கீட்டு அலுவலகர் உறுதிப்படுத்துதல் வேண்டுமென்பதுடன் அத்தொகுதியின் பயனுறுதித்தன்மை தொடர்பாக காலத்துக்குக்காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதற்கிணங்க தொகுதியை பயனுறுதிமிக்கதாக நடாத்திச் செல்வதற்குத் தேவையான மாற்றங்களையும் மேற்கொள்ள வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகள் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களம் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைத் சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் உசிதமான மற்றும் நியாயமான முறையில் உள்ளடக்கப்பட்டுள்ளது என,

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு அலுவலகருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகளுக்கான அறிக்கை**

---

2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பிரகாரம் கீழ் காணும் விடயங்களை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) சென்ற ஆண்டின் நிதிக்கூற்றுக்களின் இறுதி மிகுதிகள் மற்றும் அதற்கமைய மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் உள்ள மிகுதிகளுடன் சமமாகாத 13 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. சென்ற ஆண்டின் கணக்காய்வு மூலம் காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் திருத்தப்பட்டமை அதற்கான காரணியாக அறியப்பட்ட போதிலும், நிதிக்கூற்றுக்களில் குறிப்புக்கள் மூலம் அதற்கான வெளிப்படுத்தல்கள் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இவ்வறிக்கையில் 2.4 பந்தியில் காணும் அவதானிப்புக்கான சென்ற வருடம் என்னால் செய்யப்பட்ட பரிந்துரைகள், மீளாய்வாண்டு நிதிக்கூற்றுக்கள் முன்வைக்கப்படுகையில் திருத்தப்பட்டிருக்கவில்லை.

**1.6 நிதிக்கூற்றுக்கான கருத்துரை**

---

**1.6.1 நிதி செயலாற்றுகை கூற்று**

---

**1.6.1.1 வருமானம் பெறுகை**

---

கீழ் காணும் அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன.

(அ) 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்கம் கொண்ட அரச கணக்குகள் சுற்றுநிருபத்தின் 3.1 பந்திக்கமைவாக திணைக்களத்தின் கணக்குகள், திறைசேரி இறுதி கணக்குகளுடன் ஒப்புதலாக வேண்டி இருந்த போதும் திறைசேரி ஏடுகள் மற்றும் திணைக்கள ஏடுகளின் படி மதுவரி வருமானத்தில் ரூபா 25,000 க்கான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2015 யூலை 20 ஆந் திகதிய 01/2015 ஆம் இலக்கம் கொண்ட அரச நிதிக் கொள்கைக்கான சுற்று நிருபத்தின் 07 ஆம் பந்திக்கமைவாக மதுவரி ஆணையாளர் அதிபதியினால் வருமான அடையாளத்திற்கான மாதாந்த அறிக்கை எதிர்வரும் மாதத்தில் 10 ஆம் திகதிக்கு முன் அரச நிதிசார் கொள்கைக்கான பணிப்பாளர் அதிபதியிடம் கையளிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நிதிக்கூற்றுடன் முன்வைக்கப்பட்டுள்ள ACA-1(1) படிவத்தின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதிக்கு நிலுவை வருமான மீதி ரூபா 3,799,189,371 ஆக இருந்ததுடன் நிலுவை வருமான அறிக்கையின் படி மிகுதி ரூபா 3,319,192,027 ஆக இருந்தமையினால் ரூபா 479,997,344 க்கான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.6.1.2 வருமானம் சாரா பெறுகை

--------------------------------------------

கீழ்க் காணும் அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன.

(அ) திறைசேரி அச்சுப் பிரசுரம் (SA-30) மற்றும் திணைக்கள திரண்ட பரீட்சை மீதியில் குறிக்கப்பட்டுள்ள வைப்புப் பெறுகையில் காணப்பட்ட ரூபா 25,000 திற்கான வேறுபாடு சீராக்கல் கணக்கில் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திறைசேரி அச்சுப் பிரசுரத்திற்கமைவாக வைப்புப் பெறுகை ரூபா 299,034,574 ஆக இருந்ததுடன் முன்வைக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்கமைவாக அது ரூபா 299,009,574 ஆக இருந்தமையினால் ரூபா 25,000 திற்கான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.6.1.3 மீண்டெழும் செலவினங்கள்

----------------------------------------------

கீழ் காணும் அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன.

(அ) முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் நிகழ்ச்சி நிரலின் படி செலவின சுருக்க ACA-2 படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மீண்டெழு செலவினத்திற்கான மொத்த தேறிய ஒதுக்கீடு ரூபா 1,168,500,000 ஆக குறிப்பிடப்பட்டிருந்ததுடன் மொத்த மீண்டெழு செலவினமாக ரூபா 936,801,576 காட்டப்பட்டிருந்தது. செலவின கூற்று ACA-2(ii) இன் படி அது முறையே ரூபா 1,159,800,000 மற்றும் ரூபா 928,392,355 ஆக காட்டப்பட்டிருந்தன.

(ஆ) நிதி செயலாற்றல் கூற்றில் பிரதான பேரேட்டு செலவினத்தின் கீழ் முற்பண கொடுப்பனவாக ரூபா 59,315,710 காட்டப்பட்டிருந்த போதிலும், நிதிக்கூற்றுடனான திறைசேரி அச்சுப் பிரசுரத்தின் (SA-52) படி அது ரூபா 59,325,710 ஆகவும் திரண்ட பரீட்சை மீதியின் படி அது ரூபா 59,490,410 ஆகவும் காணப்பட்டன.

### 1.6.2 நிதி நிலைக்கான கூற்று

----------------------------------------

### 1.6.2.1 நிதிசாரா சொத்து

-----------------------------

கீழ் உள்ள அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன.

(அ) சென்ற வருட திசெம்பர் 31 ஆந் திகதிக்கு நிதிசாரா சொத்துக்கான ரூபா 982,032,375 மீதியினை மீளாய்வு வருடம் திசெம்பர் 31 ஆந் திகதிக்கு ரூபா 1,371,338,801 ஆக சீராக்கலுக்கான நாட்குறிப்புக்கள் கணக்காய்வுக்காக முன்வைக்கப்படவில்லை.

(ஆ) மீளாய்வு வருடம் மூலதன செலவினத்தின் கீழ் செலவின தலைப்புக்கு அமைவாக மூலதன சொத்துக்களை சுவீகரிப்பதற்காக ரூபா 107,562,052 செலவிடப்பட்டபோதும் நிதிசாரா சொத்துக்களின் (ACA-6) கீழ் கொள்வனவாக ரூபா 56,420,700 என குறிப்பிடப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டு வருடம் ரூபா 45,567,770.77 பெறுமதி வாய்ந்த கட்டடங்கள் மற்றும் கட்டுமானங்கள் செய்யப்படுகின்ற வேலை பெறுமானத்தின் கீழ் நிதிசாரா சொத்துக்களாக நிதி நிலைக்கான கூற்றில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை.

### 1.6.2.2 வைப்புக் கணக்கு மீதி

-------------------------------------

கீழுள்ள அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன.

(அ) திறைசேரி அச்சுப் பிரசுரத்திற்கு அமைவாக 2019 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு வைப்பு மீதி ரூபா 345,576,033 ஆக இருந்ததுடன் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றின் படி அது ரூபா 345,551,033 எனக் காட்டப்பட்டது.

(ஆ) 5 கொந்தராஜ் ஒப்பந்தங்களில் தேங்கியிருந்த மொத்தத் தொகையான ரூபா 9,946,304 மற்றும் விலை மனுக்கோரலில் வைப்புப் பணமான ரூபா 71,000 காலாவதியான வைப்பு சம்பந்தமான நிதிப்பிரமாணம் 571 அமைவாக அரச வருமானத்தில் வரவு வைப்பதற்கான நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படவில்லை.

### 1.6.2.3 கட்டுநிதிக் கணக்கு மீதி

-----------------------------------------

கீழ் உள்ள அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன.

(அ) திணைக்கள திரண்ட பரீட்சை மீதிக்கு அமைவாக இனங்காணப்படாத இரண்டு கட்டு நிதி மீதிகளின் மொத்தம் ரூபா 115,059,294,193 உம் 248 தலைப்பின் கீழ் ரூபா 26,897,295 க்கான பற்று மீதியும் காணப்பட்டன. இம்மீதிகள் கட்டு நிதி கணக்குக்கான ACA-3 படிவத்திலும் வெளிக்கொணரப்படாததுடன் இது சம்பந்தப்பட்ட விளக்கமும் முன்வைக்கப்படவில்லை.

(ஆ) திணைக்களத்தின் திரண்ட பரீட்சை மீதி மற்றும் திறைசேரி திரண்ட பரீட்சை மீதி இடையிலான கீழ் காணும் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| விடயம் | திணைக்கள திரண்ட பரீட்சை மீதியின் படி | திறைசேரி திரண்ட பரீட்சை மீதியின் படி | வேறுபாடு |
|---|---|---|---|
| 7002-72-18(வரவு) | 3,355,000 | 60,514,721 | 57,159,721 |
| 7002-72-19(வரவு) | 116,487,354,076 | 1,370,900,161 | 115,116,453,915 |
| 7002-72-19(பற்று) | 116,459,211,469 | 115,707,036,469 | 752,175,000 |

(இ) தேர்தல் கடமைகளில் ஈடுபட்ட பணிக்குழாமுக்கான ரூபா 1,051,429 பணம் தேர்தல் திணைக்களத்திலிருந்து ஒதுக்கீடு கிடைக்காமையினால் 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் தீர்க்கப்பட முடியாது போயிற்று.

### 1.6.3 காசு பாய்ச்சல் கூற்று

-------------------------------------

### 1.6.3.1 நடவடிக்கை செயல்பாடுகளினால் உண்டான காசுப்பாய்ச்சல்

----------------------------------------------------------------------------------------------------

கீழ் உள்ள அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன.

(அ) கட்டுநிதிக் கணக்கின் வருட ஆரம்ப மீதியான ரூபா 29,735,446 பணம் மற்றும் கட்டுநிதிக் கணக்கின் திணைக்கள மற்றும் திறைசேரி அச்சு இடையில் வேறுபாட்டின் ரூபா 45,475,138 பணம் மற்றும் இரு பெறுமதிகளின் மொத்த தொகையான ரூபா 75,210,583 பணத்தை வருமானம் சாரா கிடைப்பனவாக காட்டப்பட்டிருந்தது.

(ஆ) நிதிக்கூற்றுக்களிலுள்ளான ACA-2(ii) படிவத்தின் படி நபர்களின் சம்பளம் ஆகியன மற்றும் நடவடிக்கை செலவுகள் ரூபா 928,392,355 வாக இருந்ததுடன் காசுப்பாய்ச்சல் கூற்றை தயாரிக்கும் போது அதை ரூபா 935,818,716 ஆக எடுக்கப்பட்டிருந்தது.

**1.6.3.2 முதலீட்டு செயல்பாடுகளினால் உண்டான காசுப்பாய்ச்சல்**

----------------------------------------------------------------------------------------------------

கீழ் உள்ள அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன.

(அ) நிதிசாரா சொத்துக்களுக்கான கூற்றின் (ACA-6) படி சொத்துக்களை விற்பனை செய்ததன் மூலம் ரூபா 23,002 க்கான வருமானம் கிடைத்தமை நிதிய காசுப்பாய்ச்சல் கூற்றில் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ACA-5 படிவத்தின் படி முற்பணம் அறவிடல் மற்றும் கொடுப்பனவு முறையே ரூபா 50,529,077 மற்றுமு் ரூபா 59,315,710 ஆக இருந்ததுடன் காசு பாய்ச்சல் கூற்றில் எடுக்கையில் அது முறையே ரூபா 44,049,500 மற்றும் ரூபா 51,833,719 என எடுக்கப்பட்டிருந்தன.

(இ) ACA-2(ii) படிவத்தின் படி பௌதீக சொத்துக்களை நிர்மாணித்தல், கொள்வனவு செய்தல் மற்றும் சுவீகரித்தல் ரூபா 110,015,053 ஆக இருந்ததுடன் காசுப்பாய்ச்சல் கூற்றில் எடுக்கையில் அது ரூபா 64,447,282 என எடுக்கப்பட்டிருந்தது.

**1.6.3.3 நிதி செயல்பாடுகளினால் உண்டான காசுப்பாய்ச்சல்**

-----------------------------------------------------------------------------------------

நிதி செயல்பாடுகளினால் உண்டான காசுப்பாய்ச்சலை சீராக்கங்களின் போது வருட ஆரம்பத்தில் இருந்த ரூபா 29,735,446 ஆன காசு மீதியை சீராக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

## 2.1 வருமான முகாமைத்துவம்

### 2.1.1 மதுவரி வருமானம்

கீழ் உள்ள அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வு வருடத்தின் ஆரம்ப மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 135,000 மில்லியன் ஆக இருந்ததுடன் திணைக்களத்தினால் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா மில்லியன் 115,417 ஆக இருந்தது. அது மதிப்பிடப்பட்ட வருமானத்தில் நூற்றுக்கு 85 ஆகும்.

(ஆ) 2014 ஆம் வருடம் முதல் 2019 ஆம் ஆண்டு வரை சேகரிக்கப்பட்ட தேறிய மது வரி வருமானத்தின் விபரம் கீழே உள்ள படியாகும்.

| வருடம் | மதுவரி வருமானம் | வீதாசார வேறுபாடு |
|---|---|---|
| | ரூபா மில்லியன் | |
| 2014 | 69.1 | 4.6 |
| 2015 | 105.2 | 52.2 |
| 2016 | 120.2 | 14.2 |
| 2017 | 113.2 | (5.8) |
| 2018 | 113.8 | 0.5 |
| 2019 | 115.3 | 1.3 |

(இ) 902 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலுக்கு அமைவாக உரிய தினம் வரிப்பணம் செலுத்தாமையினால் மிகைக் கட்டணம் செய்யப்படுவதுடன் அவ்வாறு செய்யப்படாத 9 கம்பெனிகளில் மொத்தம் ரூபா 39,514 மிகைக் கட்டணம் அறவிடப்படாது இருந்தது. மிகைக்கட்டணத்தை உரிய முறையில் கணக்கிடப்படாததன் காரணமாக 4 கம்பனிகள் சம்பந்தமாக ரூபா 42,643 மிகைக் கட்டணப்பணம் கிடைக்காது போய் இருந்தது.

(ஈ) 2019 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு 05 கம்பனிகளில் 05 வருடங்கள் கடந்த நிலுவை வரிப் பணத்தின் மொத்தம் ரூபா 479.99 மில்லியன் ஆக இருப்பதுடன் தாமதக் கட்டணத்தின் மொத்தம் ரூபா 1,896.39 ஆகும். 2 கம்பனிகள் சம்பந்தமாக வழங்கு தொடரப்பட்டு இருந்ததுடன் 3 கம்பனிகள் சம்பந்தமாக சட்ட நடவடிக்கை எடுக்கும் பொருட்டு சட்டமா அதிபரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக குறிப்பிடுகின்ற போதிலும் ஒரு முன்னேற்றமும் அவதானத்தில் தெரியவில்லை.

(உ) நிலுவை வருமானம் சேகரித்தல் சம்பந்தப்பட்ட நிதிப் பிரமாணம் 176(2), 3 அமைவாக வருமானம் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.1.2 புகையிலை வரி**

---------------------------

(அ) புகையிலை வரி அதிகாரச்சட்டத்திற்கு அமைவாக வரி அறவிடப்படாமை

1999 ஆம் ஆண்டு 08 ஆம் இலக்க புகையிலை வரி அதிகாரச்சட்டத்தின் 2 ஆவது பிரிவின் படி இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் ஒவ்வொரு சுருட்டு, பீடி மற்றும் ஒவ்வொரு கிலோகிராம் குழாய் புகையிலைக்கும் வரி ஏற்படுத்தி அறவிடப்பட வேண்டி இருந்த போதிலும், உற்பத்தி செய்யப்படும் சுருட்டு மற்றும் பீடி சம்பந்தமாக செய்யப்பட்ட மாதிரி கணக்காய்வு சோதனையின் போது அவ்வாறான வரியொன்று அறவிடப்படாமை அவதானிக்கப்பட்டது. 2019 ஆம் வருடமாகும் போது பீடி மற்றும் சுருட்டு உற்பத்திக்காக புகையிலை இறக்குமதி செய்யப்படுகின்ற 18 நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த நிறுவனங்களின் கீழ் பீடி மற்றும் சுருட்டுக் கைத்தொழிலாளர் கிட்டத்தட்ட 500 பேர் திணைக்களத்தில் பதிவாகி இருந்தனர். சென்ற நான்கு வருட காலத்தினுள் அக்கைத்தொழில்களில் பீடி மற்றும் சுருட்டு உற்பத்தி ஏறக்குறைய 16 பில்லியன் அலகாக இருந்தது. பீடி மற்றும் சுருட்டு கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களிலிருந்து தற்போது விண்ணப்ப கட்டணமும் இறக்குமதி செய்யப்பட்ட புகையிலைக்காக அதற்கான வரிப் பணம் மாத்திரம் அறவிடப்படுகின்றது. இதன்படி அரசுக்கு கிடைக்க வேண்டிய வரி வருமானம் கிடைக்காது போவது அவதானிக்கப்பட்டது. கணக்காய்வு மாதிரிக்கு அமைவாக தெரிந்தெடுக்கப்பட்ட 30 நிறுவனங்களில் 2018/2019 வருடங்களில் வருடாந்த பீடி உற்பத்தி அலகு 31,348,500 ஆக இருந்ததுடன் பதியப்பட்ட 518 நிறுவனங்களை கவனத்தில் கொள்ளும் போது வருடாந்தம் பாரிய வரி வருமானம் அரசு இழக்க நேர்ந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) கணக்காய்வுக்காக முன்வைக்கப்பட்ட புகையிலை வரி வருமான கணக்குக்கு அமைவாக 2014 வருடம் முதல் 2019 ஆம் வருடம் வரையிலான காலத்தினுள் சேகரிக்கப்பட்ட உள்நாட்டு மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட புகையிலை வரி வருமானம் கீழ் உள்ளவாறு ஆகும்.

| **வருடம்** | **புகையிலை வரி வருமானம்** | | **மொத்தம்** |
| --- | --- | --- | --- |
| | **உள்நாட்டு உற்பத்தி வரி** | **இறக்குமதி புகையிலை வரி** | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| 2019 | 22,837,952 | 9,963,584 | 32,801,536 |
| 2018 | 21,587,211 | 12,704,726 | 34,291,937 |
| 2017 | 19.306,806 | 16,361,400 | 35,668,206 |
| 2016 | 27,076,026 | 6,250,121 | 33,326,147 |
| 2015 | 31,414,310 | 2,635,690 | 34,050,000 |
| 2014 | 28,064,210 | 4.377,420 | 32,441,630 |

(இ) சிகரட் பாவனைக்கு மாத்திரம் திணைக்களத்தினால் ஒழுங்குபடுத்தல் செய்யப்படுவதாகவும் பீடி பாவனைக்கு அவ்வாறானதொரு ஒழுங்குபடுத்தல் செய்யப்படுவது இல்லை எனவும் அவதானிக்கப்படுகிறது. மேலும், பீடி பாவனை ஊடாக சுவாசிக்கப்படும் புகை உடலுக்கு மோசமான தாக்கத்தை ஏற்படுத்துவதாகவும் உடலில் புதைந்துள்ள நோய்களுக்கு அது காரணியாகவும் இனங்காணப்பட்டுள்ளது. மேலும் உழைக்கும் அணியின் உற்பத்தித் திறன் பாரிய அளவிலான இழப்புக்கு இது தாக்கத்தினை உண்டுபண்ணுவதாக இனங்காணப்பட்டுள்ளது. ஆகையினால் பீடி உற்பத்தியை ஒழுங்குபடுத்தல் மீதும் கவனம் செலுத்துவதன் தேவைப்பாடு இருப்பதாக அவதானிக்கப்படுகின்றது.

## 2.2 செலவின முகாமைத்துவம்

கீழே உள்ள அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன.

(அ) மிகை ஒதுக்கீடு ஏற்படுத்திக் கொடுத்தல்

07 விடயங்களுக்காக மொத்தம் ரூபா 507.2 மில்லியன் க்கான ஒதுக்கீடு ஏற்படுத்தப்பட்டிருந்தும் அந்த செலவின விடயம் சம்பந்தமாக ஏற்படுத்தி இருந்த ஒதுக்கீடுகளின் மொத்தம் ரூபா 124.8 மில்லியன் மாத்திரம் பாவனை செய்யப்பட்டிருந்தது. அந்த செலவின விடயங்களின் சேமிப்பு ஏற்படுத்தி இருந்த தேறிய ஒதுக்கீட்டில் நூற்றுக்கு 18 முதல் நூற்றுக்கு 84 வரையிலான வீச்சு அளவாக இருந்தது.

(ஆ) ஏற்படுத்தியிருந்த ஒதுக்கீடுகளை பாவனை செய்யாமை

இரண்டு விடயங்களுக்காக ஏற்படுத்தியிருந்த ரூபா 58.45 மில்லியன் க்கான முழு தேறிய ஒதுக்கீட்டை எவ்வித பாவனையும் செய்யப்படாது முழுமையாக சேமிப்பில் இருந்தது.

(இ) திட்டங்களை அமுல்படுத்துவதில் தாமதங்கள் கீழே உள்ளவாறு ஆகும்.

கீழ்காணும் 05 திட்டங்களுக்கான கட்டுமானங்கள் 2020 யூன் 24 ஆந் திகதி வரையிலும் முடிக்கப்படாது இருந்தன.

| **திட்டம்** | **மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி** | **ஆரம்பிக்கப் பட்ட திகதி** | **முடிக்கப்பட வேண்டிய திகதி** | **2019.12.31 திகதிக்கு செலவு** | **முன்னேற்றம் (2020 யூன் மாதத்திற்கு)** |
|---|---|---|---|---|---|
| கண்டி கட்டம் (III) | 17,810,625 | 2019.02.05 | 2019.09.10 | 17,810,625 | முடிக்கப்படவில்லை. தாமதம் 9 மாதம் தாண்டி உள்ளது. |
| அம்பாறை | 51,600,000 | 2017.08.03 | 2018.03.04 | 44,625,936 | முடிக்கப்படவில்லை. (தாமதம் இரண்டு வருடம்) |
| பருத்தித்துறை | 61,780,000 | 2019.05.12 | 2020.01.14 | 30,000,000 | முடிக்கப்படவில்லை. |
| முல்லைத்தீவு | 49,000,000 | 2019.02.08 | 2020.02.08 | 35,986,421 | |
| பூகொடை | 30,640,000 | 2019.07.05 | 2019.11.03 | 18,397,986 | |

## 2.3 பொறுப்புக்கள் மற்றும் தொடர்புகள் ஏற்படுத்தல்

---

கீழ் உள்ள அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன.

(அ) 11 மீண்டெழும் செலவின விடயங்கள் சம்பந்தமாக 27 சந்தர்ப்பங்களில் பெறப்பட்ட நிரம்பல் மற்றும் சேவைகளின் மொத்தத் தொகை ரூபா 3,430,288 மற்றும் 04 மூலதன செலவின விடயங்கள் சம்பந்தமாக 04 சந்தர்ப்பங்களில் பெறப்பட்ட சேவைகளின் மொத்தத் தொகை ரூபா 1,468,150 பொறுப்புக்கள் கூற்றில் காட்டப்படவில்லை.

(ஆ) 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்கு சுற்று நிருபத்தின் 3.4 ஆம் பந்திக்கு அமைவாக குறிப்பு இலக்கம் (iii) கீழ் அறிவிக்கப்படாது தொடர்பு அல்லது பொறுப்பு முன்னைய வருட செலவினமாக 2020 வரை தீர்க்கப்படாது ஆயினும், 2019 வருடம் அவ்வாறு அறியத்தராத 15 சந்தர்ப்பங்கள் சம்பந்தமான மொத்தம் ரூபா 4,898,437 ஆனவை 2020 ஆம் ஆண்டினுள் தீர்க்கப்பட்டிருந்தன.

(இ) நிதிப்பிரமாணம் 94(1) அமைவாக வருடாந்த மதிப்பீட்டில் ஒதுக்கீடு இல்லாத போது செலவினத்துக்கு அல்லது தொடர்புடன் இணையக் கூடாதென காட்டப்பட்டும் செலவின விடய இலக்கம் 1406 சம்பந்தமாக, ஒதுக்கீடு சேமிப்பு ரூபா 43,903 மாத்திரம் இருக்கையில் ரூபா 1,847,321 க்கான பொறுப்புக்கள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தன.

## 2.4 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தரினால் செய்யப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்

---

2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கீழேயுள்ள விடயங்கள் சம்பந்தமாக உறுதிப்படுத்தல் செய்ய வேண்டிய இருந்த போதிலும், அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

(அ) திணைக்களம் நிதி நிர்வாகத்தின் பொருட்டு ஆக்கபூர்வமான உள்ளக நிர்வாக முறைமை ஒன்றை தயாரித்து பேணப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்தல் வேண்டும். அது போன்று அம்முறைமையின் ஆக்கபூர்வ தன்மையினை பற்றி காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதற்கமைவாக முறைமையினை ஆக்கபூர்வமாக பேணப்படுவதற்கான மாற்றங்கள் செய்யப்பட வேண்டியதுடன் அம்மீளாய்வுகள் எழுத்து மூலமாக செய்யப்பட்டு அதன் பிரதியொன்றை கணக்காய்வு தலைமை அதிபதிக்கு முன்வைக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அவ்வாறான மீளாய்வுகள் செய்யப்பட்டதற்கான கூற்றுக்கள் கணக்காய்வில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கணக்காய்வு தலைமை அதிபதியின் தேவைக்கேற்ப குறிப்பிட்ட காலத்தினுள் சகல கணக்காய்வு விசாரிப்புக்களுக்கும் பதில் அளிக்க வேண்டியிருப்பதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருப்பினும் கணக்காய்வு விசாரிப்புக்களில் விடை பெறுவதில் தாமதங்கள் தேர்ந்து இருந்தன.

**3. நடவடிக்கை மீளாய்வு மற்றும் செயலாற்றுகை**

-----------------------------------------------------------------------------

முன்வைக்கப்படும் நிதிக் கூற்றுக்களில் குறித்துள்ள வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சம்பந்தப்பட்ட நடவடிக்கை மீளாய்வு பேண்தகு அபிவிருத்தி, நல்லாட்சி மற்றும் மனிதவள முகாமைத்துவம் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புக்கள் மேலே 1.1 பந்தியில் காட்டப்பட்டுள்ள 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் படி முன்வைக்கப்படும் அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

ஆர்.ஆர்.எம்.அபேசிங்க பண்டா
பதில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பதிலாக

அத்தியாயம் 04

# 4. செயலாற்றுகைச் சுட்டிகள்

**4.1** அறிமுகம்

**4.2** நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள்

- **4.2.1** நிர்வாகப் பிரிவு
- **4.2.2** வருமானப் பிரிவு
- **4.2.3** சட்ட வலுப்படுத்தற் பிரிவு
- **4.2.4** கணக்கீட்டுப் பிரிவு
- **4.2.5** உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு
- **4.2.6** மனித வளப் பிரிவு
- **4.2.7** தகவல் தொழில்நுட்பப் பிரிவு
- **4.2.8** போக்குவரத்து, ஆதரவளிப்புப் பிரிவு
- **4.2.9** ஆராய்ச்சி மற்றும் கற்கைகள் பிரிவு
- **4.2.10** வழங்கல் ஒழுங்கமைப்புப் பிரிவு
- **4.2.11** சட்டப் பிரிவு

## 4.1 அறிமுகம்

**2019** இன் செயற் திட்டத்தை இனங்காணுதல் **2018** ஆம் ஆண்டின் இறுதியில் இலங்கை மதுவரித் திணைக்களத்தின் நிர்வாகப் பிரிவால் மேற்கொள்ளப்பட்டது. செயற் திட்டத்தை இனங்காணுகையில் நிறுவனத்தின் நிறைவேற்றுகைச் சுட்டெண்ணானது, பிரதான நிறைவேற்றுகைச் சுட்டெண்ணாக **(**K.P.I–Key Performance Indicates) தெளிவாக குறிப்பிடாமை ஏற்றுக்கொள்ளப்படுகிறது. அவ்வாறில்லாது அதன் செயற் திட்ட வருமான இலக்கையும் கண்டுபிடிப்பு இலக்கையும் இனங்கண்டு அவற்றை உரிய பிரிவுகளின் கீழ் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2019 இன் செயற்திட்டத்தினைக் கவனத்திற் கொண்டு 2019 இற்கான நிறைவேற்றுகை அறிக்கை( நிர்வாக அறிக்கை) இன் பொருட்டு எதிர்பார்த்த இறுதிப் பூர்த்தியின் சதவீத வளர்ச்சி இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. **2020** இன் செயற் திட்டம் தயாரிக்கையில் இங்கு இனங்காணப்பட்ட குறைபாடுகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

2019 இன் செயற் திட்டத்தின் அடிப்படையில் உரிய செயற்பாட்டுப் பிரிவுகளிற்கான எதிர்பார்க்கப்பட்ட பூர்த்திச் சதவீதமாகப் பார்க்கையில் தகவல் தொழில்நுட்பப் பிரிவின் புதிய வேலைத்திட்டம் செயற்படுத்தல் மற்றும் ஆராய்ச்சி மற்றும் கற்கைகள் பிரிவை புதிய பிரிவாக ஸ்தாபித்தலின் பின்னர் அதன் ஆராய்ச்சி நடவடிக்கைகளிற்காக அடிப்படைத் தேவைகளை வழங்குதற்கான காலத்தின் பிரகாரம் அப்பிரிவுகளின் வளர்ச்சி 50% - 74% வரை காணப்படுவதுடன் ஏனைய சகல பிரிவுகளினதும் எதிர்பார்த்த இறுதி வளர்ச்சி வீதம் 90% - 100% ஆக இருந்தது. அது பற்றிய விரிவான அறிக்கை 4.2 இல் தரப்பட்டுள்ளது.

## 4.2 நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள்

| திணைக்களத்தின் பிரிவுகள் | விசேட சுட்டிகள் | | எதிர்பார்த்த வெளியீட்டு சதவீதமாக ( % ) உண்மை வெளியீடு | | |
|---|---|---|---|---|---|
| | | | 100% - 90 % | 75% - 89 % | 50 % - 74 % |
| **4.2.1** நிர்வாகப் பிரிவு | நிர்வாகம் மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் | | ✓ | | |
| **4.2.2** வருமானப் பிரிவு | **2019** இன் எதிர்பார்த்த வருமானத்தை சேகரித்தல் | மதுபானம் | ✓ | | |
| | | புகையிலை | ✓ | | |
| **4.2.3** சட்ட வலுப்படுத்தல் பிரிவு | 1. உரிய கட்டளைச் சட்டங்களை செயற்படுத்தல் | | ✓ | | |
| | 2. மதுவரி உரிமங்களிற்கான தொழில்நுட்ப குற்ற அறிக்கைகள் | | ✓ | | |
| | 3. போதைப்பொருட் குற்ற அறிக்கைகள் | | ✓ | | |
| | 4. புகையிலை தொடர்பான சுற்றிவளைப்பு இலக்குகள் | | ✓ | | |
| **4.2.4** கணக்கீட்டு பிரிவு | **2019** வருடத்தின் சகல கணக்கீட்டு நடவடிக்கைகள் | | ✓ | | |
| **4.2.5** உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு | **2019** வருடத்தில் மேற்கொள்ள வேண்டிய உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்கள் | | | ✓ | |
| **4.2.6** மனித வளப் பிரிவு | 1. சகல அலுவலர்களிற்கும் பயிற்சி | | ✓ | | |
| | 2. அலுவலர் மேம்பாடு | | ✓ | | |
| **4.2.7** தகவல் தொழில்நுட்பப் பிரிவு | இணையத்தளத்தை இற்றைப்படுத்தல் | | ✓ | | |
| | புதிய வேலைத்திட்டங்களை செயற்படுத்தல் | | | | ✓ |
| **4.2.8** போக்குவரத்து, ஆதரவளிப்பு பிரிவு | பிரேரிக்கப்பட்ட கட்டடங்களின் நிர்மாண நடவடிக்கைகள் | | ✓ | | |
| | போக்குவரத்து, ஏனைய பணிகள் | | ✓ | | |
| **4.2.9** கற்கை மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு | கற்கை நடவடிக்கைகள் | | ✓ | | |
| | ஆராய்ச்சி நடவடிக்கைகள் | | ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்படவில்லை. | | ✓ |
| **4.2.10** வழங்கல்தொடர் ஒழுங்கமைப்புப் பிரிவு | ஸ்ரிக்கர் வேலைத்திட்டம் | உள்நாடு | - | - | - |
| | | வெளிநாடு | ✓ | | |
| **4.2.11** சட்டப் பிரிவு | சட்ட தேவைப்பாடுகள் | | ✓ | | |
| | எதிர்பார்த்த புதிய தேர்ச்சிகள் | | ✓ | | |

அத்தியாயம் 05

# 5. பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை(SDG) அடையும் செயலாற்றுகை

**5.1** அறிமுகம்

**5.2** பேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் அடிப்படையில் இலங்கை மதுவரித் திணைக்களத்தின் செயற்பாடுகள்

**5.3** முன்னேற்றம்

## 5.1 அறிமுகம்

அதன் பிரகாரம் சகல அமைச்சுகள், திணைக்களங்கள், மாகாண சபைகள், பிரதேச சபைகள் ஆகியவற்றில் உள்ள அரச நிர்வாக நிறுவனங்கள் தமது வருடாந்த செயற் திட்டத்தை இனங்காணுகையில் தமது நிறுவனத்திற்கு ஏற்ப இனங்காணப்பட்ட 17 நிலையான அபிவிருத்தி இலக்குகளை தமது நிறுவனத்தினுள் நடத்துவது பற்றி இனங்காணுதல் வேண்டும். இங்கு தமது திணைக்களத்தின் தொலைநோக்கு, செயல்நோக்கு, குறிக்கோள் என்பவற்றிற்கேற்ப நடைமுறைப்படுத்தப்படும் செயற்பாடுகளை எவ்வாறு திட்டமிடுவது என்பது பற்றி ஒவ்வொரு வருட ஆரம்பத்திலும் தமது செயற் திட்டத்தில் காட்டுதல் வேண்டும்.

எனினும் **2019** இற்கான மதுவரித் திணைக்களத்தின் செயற்திட்டத்தைத் தயாரிக்கையில் இந்நிலையான அபிவிருத்தி இலக்குகள் பற்றிக் கவனத்திற் கொள்ளப்படவில்லை. எனவே **2019** இன் செயற்திட்டத்திற்கு ஏற்ப **2019** இற்கான நிர்வாக அறிக்கை தயாரிக்கையில் அங்கு நிலையான அபிவிருத்தி இலக்குகளை வெற்றிகரமாக மேற்கொள்ளல் பற்றிய விடயங்கள் காட்டப்படுகையில் ஒவ்வொரு விடயத்திற்கும் ஏற்ப வளர்ச்சியைக் காட்டுதல் கடினமாக இருந்தது. எனினும் **2020** இன் செயற் திட்டத்தைத் தயாரிக்கையில் 2017 இன் 19 ஆம் இலக்க பேண்தகு அபிவிருத்தி இலக்குகள் 17 இற்கு ஏற்ப மதுவரித் திணைக்களம் நடவடிக்கை எடுக்கும் முறையை தெளிவாகக் காட்டுதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் 2019 இன் நிர்வாக அறிக்கையில் ஒவ்வொரு பிரிவுகள் பொருட்டு இனங்காணப்பட்ட வெற்றி பெறுவதை நோக்கிய வளர்ச்சி காட்டப்படவில்லை ஆயினும் 2019 இற்கான நிர்வாக அறிக்கையில் ஒவ்வொரு பிரிவுகளிற்கும் வெற்றியீட்டுதற்கான வளர்ச்சி வீதம் காட்டப்படவில்லை ஆயினும் முன்னர் காட்டப்பட்டவாறு மதுவரித் திணைக்களத்தின் மொத்த நிறைவேற்றுகையின் எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டுச் சதவீதம் 90% - 100% ஆகக் காணப்பட்டது.

17 நிலையான அபிவிருத்தி இலக்குகளைக் கவனத்திற் கொள்கையில், இலக்கு இல. 02 உம் 06 உம் மதுவரித் திணைக்களத்தின் வேலைத்திட்டம், நிகழ்ச்சித்திட்டத்திற்கு நேரடியாகப் பங்களிக்கும் முறையானது, ஏனைய 15 இலக்குகளின் விபரங்கள் தெளிவாகக் காட்டப்படுவதால் அது பற்றி விரிவான விபரங்கள் காட்டப்படவில்லை.

## 5.2 பேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் அடிப்படையில் இலங்கை மதுவரித் திணைக்களத்தின் செயற்பாடுகள்

### ❖ இனங்காணப்பட்ட பேண்தகு அபிவிருத்தி இலக்குகள்

- 2018 இல் 2019 இன் செயற் திட்டம் தயாரிக்கையில் நிலையான அபிவிருத்தி இலக்குகள் பற்றி கவனத்திற் கொண்டு செயற் திட்டம் தயாரிக்கப்படவில்லையாயினும் பேண்தகு அபிவிருத்தி இலக்குகள் இனங்காணப்பட்டன. 2020 இன் செயற் திட்டத்திற்கு அவ்விலக்கினை உள்ளடக்கி தயாரிக்கப்பட்டது.
- 2020 இற்கான பேண்தகு அபிவிருத்தி இலக்குகள் வருமாறு:

| இலக்கு/ குறிக்கோள் | அடைவுகள் | குறிகாட்டிகள் | இது வரை எய்தப்பெறுகையின் முன்னேற்றம் | | |
|---|---|---|---|---|---|
| | | | 0% -49% | 50% -70% | 75% -100% |
| **இலக்கு - 01**<br><br>சகல இடத்திலும் சகல முறையிலும் வறுமையை ஒழித்தல் | ➢ சட்ட விரோத மதுபானங்கள் மற்றும் அபாயகரமான அவுடதங்களை வினைத்திறன் மிக்க முறையில் சட்ட வலுப்படுத்தலின் ஊடாக சமூகப் பாதுகாப்பை மேம்படுத்தல் | | | | ✓ |
| | ➢ ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் கிராமங்களைத் தெரிவு செய்து மதுபானங்கள் மற்றும் அபாயகர அவுடதங்களை வினைத்திறன் மிக்க முறையில் நிர்வகித்தல் பற்றி தெளிவுபடுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தை நாடு முழுதும் நடாத்துதல் | | | ✓ | |
| | ➢ உற்பத்திகளைக் கொள்வனவு செய்தலில் ஆர்வமின்மையை உறுதிப்படுத்தும் பொருட்டு மதுபானம், புகையிலைக்கான வருடாந்த வரியை அதிகரித்தல் அல்லது விலையை அதிகரித்தல் | | | | ✓ |
| | ➢ சட்ட விரோத மதுபான, போதைப்பொருட் பாவனையை கட்டுப்படுத்தும் முறையை செயற்படுத்துதல் | | | | ✓ |
| | ➢ பிற பங்குதாரர்களின் உதவியுடன் தவிர்ப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல் | | | ✓ | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **இலக்கு** - 02<br><br>பட்டினியை ஒழித்தல், உணவுப் பாதுகாப்பு, உயர் போஷணை மற்றும் நிலையான விவசாயத்தை ஊக்குவித்தல் | பொருத்தமற்றது | | | | |
| **இலக்கு** - 03<br><br>எல்லோருக்கும் ஆரோக்கியமான வாழ்வைப் பேணுதல், சகல வயதினருக்கும் நல்வாழ்வை மேம்படுத்தல் | ➢ மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் சட்டபூர்வ பானங்களின் தரத்தை உறுதிப்படுத்துதல் | | | | ✓ |
| | ➢ சுகாதார, வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு சட்ட விரோத மதுபான விற்பனையைக் குறைத்தல் | | | | ✓ |
| | ➢ பயனுள்ள தடுப்புத் திட்டங்கள் ஊடாக சமூகப் பாதுகாப்பை ஏற்படுத்தல் | | | ✓ | |
| | ➢ நாட்டின் அனைத்து மக்களின் நல்வாழ்வு பொருட்டு சட்ட விரோத மதுபானங்கள், போதைப்பொருட்கள் தொடர்பில் சட்டவலுப்படுத்துதல் | | | | ✓ |
| **இலக்கு** - 04<br><br>அனைவருக்கும் இடைநிலை மற்றும் சமத்துவக் கல்வியை வழங்கல் மற்றும் வாழ்நாள் முழுதும் கற்றல் செயற்பாடுகளை மேம்படுத்தல் | ➢ உயிருக்கு ஆபத்தான மதுபானங்களை தவிர்ப்பதற்கான தெளிவுபடுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தை சகல மட்டத்திலுள்ள பிரஜைகளுக்கும் நடத்துதல். | | | ✓ | |
| | ➢ இலங்கை மதுவரித் திணைக்களத்தின் சகல தர அலுவலர்களிற்கும் மனித வள அபிவிருத்தி பற்றிய பயிற்சி. | | | | ✓ |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **இலக்கு - 05**<br>ஆண் பெண் சமத்துவத்தை பேணலும் சகல பெண்கள், பெண் பிள்ளைகளை வலுவூட்டலும் | ➢ மதுவரிக் காவலாளர் இலிருந்து பரிசோதகர் வரையான மதுவரிப் பதவிகளிற்கு ஆட்சேர்த்தல் பொருட்டு ஆண், பெண் இரு பாலினருக்கும் விண்ணப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.<br>➢ பெண் அலுவலர்களிற்கு பதவியுயர்வின் பொருட்டு சம சந்தர்ப்பம் வழங்குதல்.<br>➢ ஆண் பெண் அலுவலர்களிற்கு பயிற்சி, அபிவிருத்தி பொருட்டு சம சந்தர்ப்பம் வழங்கல்<br>➢ ஆண், பெண் இருபாலாருக்கும் நியாயமான சம்பளத்திற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டதால் ஆண், பெண் பேதம் கருத்திற் கொள்ளப்படவில்லை.. | | | ✓ | ✓<br>✓<br>✓ |
| **இலக்கு** - 06<br>சகலரும் நீர், சுகாதார வசதிகளைப் பெறுதலை உறுதி செய்தல், நீர், சுகாதாரத்தின் நிலையான முகாமைத்துவம் | மதுபான உற்பத்திக் கைத்தொழில்களிற்கு சுற்றாடற் சான்றிதழ் பெறுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இயற்கை நீர் வளங்களை மாசுபடுத்தும் சட்ட விரோத மதுபானங்களைக் கட்டுப்படுத்துவதன் மூலம் அத்தகைய நீர் வளங்களைப் பாதுகாத்தல். | | | | ✓ |
| **இலக்கு** - 07<br>சகலருக்கும் இயனறளவு, நம்பகரமான, நிலையான, நவீன சக்தியைப் பெறுவதை உறுதி செய்தல் | மதுபான உற்பத்திக்கான சகல உற்பத்திச்சாலைகள், வடிசாலைகளை செயற்படுத்துகையில் குறைவான மின் சக்தியை பயன்படுத்தி சக்தியைச் சேமிப்பதற்கு உற்பத்திச்சாலைகள் நடவடிக்கை எடுத்தற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | - | - | - | - |
| **இலக்கு** - 08<br>நிலையான, உலகளாவிய, பொருளாதார விருத்தி, சகலருக்கும் முழுமையான, உற்பத்தித்திறன் மிக்க வேலைவாய்ப்பு, சிவில் வேலைகளை மேம்படுத்தல். | ➢ இலங்கை மதுவரித் திணைக்களத்தினால் நிறுவனத்தின் சகல தரப் பணியாளர்களிற்கும் பண்பான பணிகள் வழங்கப்பட்டுள்ளன. நிதி அமைச்சு மற்றும் மதுவரித் திணைக்களத்தினால் நியாயமான வருமானமும் அவர்களின் தொழில், வாழ்க்கைக்கான பாதுகாப்பு, சமூகப் பாதுகாப்பு, தனிநபர் விருத்தி என்பவற்றிற்கான சிறப்பான வாய்ப்புகளையும் வழங்குவதுடன் அலுவலர்களினதும் மக்களினதும் அடிப்படை உரிமைகளும் உறுதிப்படுத்தப்படுகிறது. திணைக்களத்தின் சகல தரப் | | | | ✓ |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பணியாளர்களிற்கும் சமமான வாய்ப்புகள் வழங்கப்படுகிறது. | | | | |
| | ➢ வினைத்திறன் மிக்க ஒழுங்கமைக்கப்பட்ட சுற்றுச்சூழலை உருவாக்கல் | | | | ✓ |
| | ➢ நிதி அமைச்சினால் மதுவரித் திணைக்களத்தின் ஊடாக பெறப்படும் வருமானம் நாட்டின் அபிவிருத்திக்கு பயன்படுத்தப்படுகிறது. | | | | ✓ |
| **இலக்கு** - 09<br><br>மீள்திறனுள்ள உட்கட்டமைப்பை நிறுவுதல், உலகளாவிய, நிலையான தொழில்நுட்பக் கட்டமைப்பை விருத்தி செய்தல் மற்றும் புத்தாக்கத்தை ஊக்குவித்தல் | ➢ இலங்கை மதுவரித் திணைக்களத்தினால் வினைத்திறன் மிக்க மதுவரி மற்றும் புகையிலை வரி நிர்வாகப் பொறிமுறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. | | | | ✓ |
| | ➢ மதுவரி வருமான முகாமை முறை (ERMS) மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் உதவியுடன் இனங்காணப்பட்டது. | | | ✓ | |
| | ➢ வரி நிர்வாகத்தினை வினைத்திறன் மிக்கதாக்குதல். | | | | ✓ |
| | ➢ வரி நிர்வாகம் இலகுபடுத்தல் மற்றும் பொதுச் சுகாதாரப் பாதுகாப்பின் பொருட்டு மதுபானங்களிற்கான ∴பூல் புருப்∴ ஸ்ரிக்கர் அறிமுகப்படுத்தப்பட்டது. | | | | ✓ |
| | ➢ தற்போது சகல மதுவரி ஒழுங்குவிதிகளும் இலகுபடுத்தப்பட்டு திருத்தம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. | | | | ✓ |
| | ➢ புதிய மதுவரி ஒழுங்குவிதிகள் வகுக்கப்பட்டுள்ளன. | | | | ✓ |
| | ➢ புதிய உற்பத்திகளை சரிபார்த்தலின் ஊடாக மதுபான, புகையிலைக் கைத்தொழிலில் ஏற்படும் குறைபாட்டை இழிவுபடுத்தப்பட்டுள்ளது. | | | | ✓ |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **இலக்கு** - 10<br><br>நாடுகளிற்குள்ளும் இடையிலும் நிலவும் சமத்துவமின்மையை இழிவுபடுத்தல். | ➢ வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக வெளிப்பாட்டை மேம்படுத்தல் மற்றும் இலங்கை மதுவரித் திணைக்களப் பணியாளர்களிற்கு வெளிநாட்டுப் பயிற்சிக்கான சந்தர்ப்பத்தை வழங்குதல் | | | ✓ | |
| | ➢ மதுபான, புகையிலை வருமான நிர்வாகம், அபாயகரமான அவுடதங்கள் கட்டுப்பாடு, புகையிலை கட்டுப்பாடு சம்பந்தமான சர்வதேச அமைப்புடன் வினைத்திறன் மிக்க வலையமைப்பை பேணுதல் | | | ✓ | |
| | ➢ உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் ஊடாக சர்வதேச தரப்படுத்தல் அமைப்பு மற்றும் தேசிய தரப்படுத்தல் நியமங்களைப் பெற நடவடிக்கை எடுத்தல் | | ✓ | | |
| **இலக்கு** - 11<br><br>நகரங்கள், மானிட குடியேற்றங்களின் ஒருங்கிணைந்த, பாதுகாப்பான, நிலையான கட்டடங்கள் | மனித குடியேற்றங்களின் பாதுகாப்பின் பொருட்டு சட்ட விரோதமான போதைப்பொருட்கள், மதுபானங்களற்ற சமுதாயத்தை கட்டியெழுப்புதற்காக திணைக்கள வேலைத்திட்டம் செயற்படுகிறது. | | | | ✓ |
| **இலக்கு** - 12<br>நிலையான உற்பத்தி மற்றும் நுகர்வு முறைகளைப் பாதுகாத்தல். | ➢ இலங்கை மதுவரித் திணைக்களத்தின் பொறுப்பாக மதுபான நுகர்வு பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக மதுபானம் மற்றும் புகையிலை நுகர்வை குறைப்பதற்கு அல்லது இழிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் மதுபானம் மற்றும் புகையிலை நுகர்வை குறைப்பதற்கு நாடு முழுவதும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்தை நடத்துதல். அவ்வாறே மதுபான நுகர்வை கட்டுப்படுத்தும் பொருட்டு விற்பனை மற்றும் உடைமையில் வைத்திருப்பதற்கு எல்லையை நிர்ணயித்தல். உயர்தர மதுபான, புகையிலை சான்றுப்படுத்தல் பொருட்டு மதுபான உற்பத்திச்சாலையை வினைத்திறன் மிக்க முறையில் மேற்பார்வை செய்தல் | | | | ✓ |
| **இலக்கு** - 13<br><br>காலநிலை மாற்றம் மற்றும் அதன் தாக்கத்திற்கு எதிராக உடன் நடவடிக்கை எடுத்தல் | ➢ மதுவரித் திணைக்களத்தின் மதுபான உற்பத்திச்சாலைகளிற்கு புதிய உரிமம் வழங்குகையில் மத்திய சுற்றாடல் அதிகாரசபையால் வழங்கப்படும் சுற்றாடல் சான்றிதழ் பெறுவதற்கு அறிவுறுத்தலின் ஊடாக சூழல் மாசுபடலுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பூகோள காலநிலை மற்றும் சூழலுக்கு இசைவான உற்பத்திச் சான்றிதழ் பொருட்டு உலகளாவிய காலநிலை மற்றும் சுற்றுச்சூழல் இசைவுச் சான்றுப்படுத்தலுக்காக உரிய நிறுவனத்தால் கொதிகலன் சான்றிதழும் பெறப்படல் வேண்டும். | | | | ✓ |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ➢ இயற்கை நீர் வளங்களை மாசுபடலில் இருந்து பாதுகாக்கும் பொருட்டு நாடு முழுவதும் சட்ட விரோத மதுபான உற்பத்திச்சாலைகளை வினைத்திறன் மிக்க முறையில் நிர்வகித்தல் | | | | ✓ |
| **இலக்கு** - 14<br><br>நிலையான அபிவிருத்தி பொருட்டு சமுத்திரம், கடல், கடல் வளங்களைப் பாதுகாத்தலும் நிலையானதாகப் பாவித்தலும் | சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்ட கடற் பிராந்திய கடற்கரை எல்லையிலிருந்து 100 மீ. இற்கப்பால் உள்ள சுற்றுலா ஹோட்டல்களிற்கு மாத்திரம் உரிமம் வழங்குதல். | | | | ✓ |
| **இலக்கு** -15<br><br>புவியியல் சுற்றுச்சூழலை பாதுகாத்தல், பிரதியீடு, நிலையான பயன்பாடு மற்றும் வனங்களின் நிலையான முகாமை, பாலைவனமாக்கலை எதிர்த்து நிற்றலும் நில விரயம், பல்லுயிர் இழப்பு என்பவற்றைத் தடுத்தலும். | ➢ மதுவரித் திணைக்களத்தின் நிர்வாகத்தின் கீழ் சகல வடிசாலைகள், உற்பத்திச்சாலைகளை ஸ்தாபிக்கையில் அவற்றின் சுற்றுச்சூழலுக்கு இழப்பு ஏற்படாதவாறு தாபித்தல் மற்றும் அவற்றின் சூழலைப் பாதுகாக்கவும் பல்லுயிர் பாதிப்பு ஏற்படாதவாறு மேற்கொள்வதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.<br><br>➢ சட்ட விரோத கஞ்சா செய்கையை அழிப்பதன் மூலம் காடழிப்பைப் பாதுகாத்தல் | | | ✓<br><br>✓ | |
| **இலக்கு** - 16<br><br>நிலையான அபிவிருத்தி பொருட்டு அமைதியான, அனைத்தையும் உள்ளடக்கிய சமுகங்களை மேம்படுத்தல் மற்றும் அனைத்து மட்டங்களிலும் பயனுறுதி மிக்க, பொறுப்பு வாய்ந்த, அனைத்தையும் உள்ளடக்கிய நிறுவனங்களை கட்டியெழுப்புதல் | ➢ இலங்கை மதுவரித் திணைக்களத்தால் அபாயகரமான அவுடதங்கள், சட்ட விரோத மதுபானங்கள் மற்றும் புகையிலை உற்பத்தி தொடர்பில் பயன்மிக்க சட்ட அமுலாக்கலின் ஊடாக மக்களுக்கு அமைதியான சுற்றுச்சூழலைக் கட்டியெழுப்ப நடவடிக்கை எடுத்தல். அத்துடன் திணைக்களத்தின் சகல மட்டங்களிலுள்ள சகல தர அலுவலர்களும் சட்டரீதியான நிர்வாகத்திற்கு மதிப்பளிப்பதற்கு ஊக்குவிக்கப்படுகின்றனர். மேலும் அலுவலர்களினால் மேற்கொள்ளப்படும் சகல செயற்பாடுகளிற்குமான பொறுப்புக்கூறலை ஏற்கும் பொருட்டு தொடர்ச்சியான பயிற்சி வழங்கப்படுகிறது.<br><br>➢ ERMS வேலைத்திட்டத்தின் ஊடாக சகல அலுவலர்களும் வினைத்திறன்மிக்க வரி முகாமை முறைக்கு ஈடுபடுத்தப்படுவர். | | | | ✓<br><br>✓ |
| **இலக்கு** - 17<br><br>நிலையான அபிவிருத்தி பொருட்டு உலகளாவிய கூட்டாட்சியை செயற்படுத்தலும் | ➢ புகையிலை மற்றும் அற்ககோல் சம்பந்தமான அதிகாரசபையால் உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஊடாக நடத்தப்படும் வேலைத்திட்டத்திற்கு பயனுறுதி மிக்க முறையில் பங்களிப்பு வழங்கல் மற்றும் அதிகாரசபையால் | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மீளுருவாக்க முறைகளை வலுப்படுத்தலும் | உலக சுகாதார ஸ்தாபனத்தின் புகையிலைக் கட்டுப்பாடு பற்றிய நிலையியற் சம்மேளனத்தின் ஊடாக நடத்தப்படும் வேலைத்திட்டத்திற்கு பயனுறுதி மிக்க முறையில் பங்களிப்பு வழங்கல் | | | | ✓ |

அத்தியாயம் 06

# 6. மனிதவள விபரம்

**6.1** பதவியணி முகாமைத்துவம்

**6.2** நிறுவனத்தின் நிறைவேற்றுகையை மனிதவளத்தில் ஏற்படும் குறை அல்லது மிகை பாதிக்கும் முறை

**6.3** மனித வள அபிவிருத்தி

* நிறுவனத்தின் செயலாற்றுகைக்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் பங்களிக்கும் முறை

## 6.1 பதவியணி முகாமைத்துவம்

| | 2019.12.31 ஆம் திகதியில் உள்ளவாறு | | |
|---|---|---|---|
| | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | தற்போதைய பதவியணி | பதவி வெற்றிடம் |
| சிரேஸ்ட | 67 | 35 | 32 |
| மூன்றாம் நிலை | 381 | 320 | 61 |
| இரண்டாம்நிலை | 872 | 768 | 104 |
| ஆரம்பநிலை | 222 | 202 | 20 |

## 6.2 நிறுவனத்தின் செயலாற்றுகைக்கு மனிதவளத்தில் ஏற்படும் குறை அல்லது மிகை பாதிக்கும் முறை

சிரேஸ்ட பதவி வெற்றிடங்களில் இருபத்து மூன்று வெற்றிடங்கள் நிலவுவது மதுவரி அத்தியட்சகர் பதவியிலாகும். அப்பதவி வெற்றிடத்திற்கு கடமை மேவுகை மற்றும் பதிற் கடமை அலுவலர்கள் நியமிக்கப்பட்டதுடன் வழக்கு நடவடிக்கை காரணமாக நிரந்தரப் பதவிகளை வழங்க இயலாமல் இருந்தது. 2019 இல் இவ்வழக்கின் தீர்ப்பு வழங்கப்பட்டதன் காரணமாக பதவியுயர்வு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மூன்றாம் நிலைக்குரிய பதவிகளில் பரிசோதகர் பதவி வெற்றிடங்கள் 57 அளவில் நிலவுகிறது. இவ்வெற்றிடங்களை நிரப்ப மட்டுப்படுத்தப்பட்ட மற்றும் திறந்த போட்டிப் பரீட்சைகள் நடத்தப்பட்டன.

இரண்டாம் நிலைக்குரிய பதவிகளில் சார்ஜன் பதவியில் எண்பத்தி ஐந்து வெற்றிடங்கள் நிலவுகிறது. இந்நிலைக்கான காரணம் மேல் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட இரு வழக்குகள் ஏழு வருடங்களாக தொடர்ந்தமையாகும். அவ்வழக்குகளின் தீர்ப்பு தற்போது கிடைக்கப்பெற்று சார்ஜன் பதவியுயர்விற்கான பரீட்சை நடத்தப்பட்டதுடன் அதற்கான நேர்முகப் பரீட்சையை நடத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதன் பிரகாரம் இயன்றளவு விரைவாக இப்பதவியுயர்வுகள், நியமனங்களை வழங்கியதன் பின்னர் பெரியளவில் நிலவும் இவ்வலுவலர் வெற்றிடங்களை நிரப்ப இயலும்.

## 6.3 மனித வள அபிவிருத்தி

இலங்கை மதுவரித் திணைக்களத்தின் மனித வளப் பிரிவு 2019 இற்கான முழுத் திணைக்களத்தின் சீருடை அலுவலர்களினதும் இணைந்த சேவை அலுவலர்களினதும் அறிவுத் திறன் மற்றும் உளப்பாங்கு மேம்பாட்டை விருத்தி செய்து மொத்த அலுவலர்களினதும் திறன் விருத்தியை உயர்த்தும் வகையிலே 41 உள்நாட்டு, வெளிநாட்டுப் பயிற்சிகள் மீளாய்வு வருடத்தில் நடத்தப்பட்டன. அதில் மதுவரித் திணைக்களத்தின் பயிற்சிக் கல்லூரியில் 05 பயிற்சி நெறிகளும் அரச அங்கீகாரம் பெற்ற வெளியகப் பயிற்சி நிறுவனங்களில் 24 பயிற்சி நெறிகளும் திணைக்களக் கேட்போர்கூடத்தில் 08 பயிற்சி நெறிகளும் வெளிநாட்டுப் பயிற்சி நெறிகள் 04 உம் நடத்தப்பட்டன. அரச கொள்கைத் தீர்மானத்தின் கீழ் வெளிநாட்டுப் பயிற்சிநெறிகள் மட்டுப்படுத்தப்பட்டன. இங்கு ஒவ்வொரு பிரிவில் இருந்தும் ஆகக்குறைந்தது ஒரு அலுவலரையாவது ஒரு பயிற்சி நெறிக்கு ஈடுபடுத்தும் வகையில் மனித வளப் பிரிவு செயற்பட்டதுடன் விசேடமாக அரசிற்கு வரி வருமானத்தை வழங்கும் நாடு முழுவதுமுள்ள உற்பத்திச்சாலை நிறுவனங்களுடன் இணைக்கப்பட்டுள்ள அலுவலர்களின் அறிவை விருத்தி செய்யும் நோக்கில் கற்கை நெறி ஒன்று 04 குழுக்களின் கீழ் பயிற்சிக் கல்லூரியில் நடைபெற்றதுடன் கள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு சட்ட விரோத மதுபானங்கள், போதைப்பொருட்களைக் கட்டுப்படுத்தும் செயற்றிறன் மிக்க அலுவலர்களின் பாதுகாப்பு பொருட்டு மதுவரிப் பரிசோதகர்களில் இருந்து உயர் மட்டத்திலுள்ள சகல அலுவலர்களிற்கும் ஆயுதப் பயிற்சி வழங்கியமை விசேடமானது.

அவ்வாறே நாடு முழுவதும் உள்ள 637 அலுவலர்களுக்கும் லஞ்சம் அல்லது ஊழல் இன்றி சிறந்த அரச சேவையை மேற்கொள்ளும் பொருட்டு லஞ்சம் அல்லது ஊழல் பற்றிய விசாரணை ஆணைக்குழுவுடன் இணைந்து நாடு முழுவதும் 05 நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் விசேட பயிற்சி வழங்க முடிந்தமை விசேடமானதாகும். அத்துடன் சகல அலுவலர்களுக்கும் அவர்களின் தகவல் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்தும் பொருட்டு 47 அலுவலர்களிற்கு 10 கற்கை நெறிகள் நாடு முழுவதும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் போதைப்பொருள் பாவனை மற்றும் சட்ட வலுப்படுத்தல் பற்றிய கற்கை நெறியும் அலுவலர் முகாமையை மேம்படுத்தும் பொருட்டு நடத்தப்பட்டது. வினைத்திறன் மிக்க அலுவலர்கள் அவர்களின் தேர்ச்சியை மேம்படுத்தும் வகையில் பயிற்சி வழங்குவதற்கு மனித வளப் பிரிவால் முடிந்தது. அலுவலர்களின் வினைத்திறன் தடைகாண் பரீட்சைக்கு தயார்படுத்தும் பொருட்டு கற்கை நெறி ஒன்றும் தமிழ், ஆங்கில மொழித் தேர்ச்சி பொருட்டு கற்கை நெறி ஒன்றும் புதிதாக இனங்காணப்பட்ட பாதுகாப்பு ஸ்ரிக்கர் முறையை அமுல்படுத்தும் பொருட்டு 10 பயிற்சி நெறிகளும் வழங்கப்பட்டு அலுவலர்களின் தேர்ச்சியை மேம்படுத்த மனித வளப் பிரிவினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## * நிறுவனத்தின் செயலாற்றுகையில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் பங்களிக்கும் முறை

நவீன உலகின் பெறுமதி மிக்க வளங்கள் மனித வளங்களாக தற்போது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், மனித வளங்களைப் பாதுகாத்தல், விருத்தி செய்தலின் ஊடாக எந்த ஒரு நிறுவனமும் மேம்பாடடையும். மனித வள அபிவிருத்தியானது, அவர்களின் அறிவு, சேவைக்கு ஏற்ப நிரந்தரப் பயிற்சியின் ஊடாக விருத்தி செய்யப்படக் கூடிய அவர்களின் மென்பொருள் பற்றிய அறிவு( மென்பொருள் தேர்ச்சி - Soft Skills ) மற்றும் வன்பொருள் பற்றிய அறிவு ( வன்பொருட் தேர்ச்சி -Hard Skills ) என்பவற்றை தொடர்ச்சியாக இற்றைப்படுத்துதல் அவசியமானதாகும்.

இலங்கை மதுவரித் திணைக்களத்தின் குறிக்கோள் மற்றும் செயற்பாட்டினை வினைத்திறன் மிக்க முறையில் மேற்கொள்ளும் நோக்கில் தொடர்ச்சியாக உள்நாட்டு, வெளிநாட்டுப் பயிற்சிகள் நடத்தப்படுவதுடன் அப்பயிற்சிநெறிகள் திணைக்களப் பயிற்சிக் கல்லூரியிலும் அங்கீகரிக்கப்பட்ட வெளியகப் பயிற்சி நிறுவனங்களிலும் வழங்கப்படுகின்றன. இதற்காக மதுவரித் திணைக்களத்தின் வளவாளர்கள் பங்களிப்புச் செய்ததுடன் வெளியக கற்ற வளவாளர்களும் பங்களிப்புச் செய்கின்றனர். மதுவரித் திணைக்களத்தின் செயல் நோக்கை நிறைவேற்றும் குறிக்கோள்களில் பிரதான பணிகளாக காட்டப்பட்ட செயல்நோக்கை மேற்கொள்ளும் பொருட்டு 2019 ஆம் ஆண்டில் 41 உள்நாட்டு, வெளிநாட்டுப் பயிற்சி நெறிகள் நடத்தப்பட்டதுடன், சகல தரத்திலுள்ள மதுவரி அலுவலர்களும் இணைந்த சேவை அலுவலர்களும் இப்பயிற்சி நெறிகளுக்கு ஆகக்குறைந்தது ஒரு பயிற்சிக்கு ஒருவரையாவது கொண்டு மனித வளப் பிரிவு நடவடிக்கை மேற்கொண்டது.

சட்ட விரோத போதைப் பொருட்கள், மதுபானக் கடத்தலை கட்டுப்படுத்தும் வகையிலும் சட்டம் மற்றும் அண்மையில் இனங்காணப்பட்ட போதைப்பொருள் பற்றியும் அதனைக் கட்டுப்படுத்தல் பற்றியுமான புதிய முறைகள் தொடர்பில் மதுவரி அலுவலர்களிற்கு தொடர் பயிற்சி வழங்கப்பட்டது. இதற்காக இலங்கை பொலிஸ், தேசிய அபாயகரமான அவுடதங்கள் கட்டுப்பாட்டு சபை என்பவற்றின் பயிற்சி வளவாளர்களின் உதவியும் அவர்களது இரசாயனப் பகுப்பாய்வுகூட வசதியும் பெறப்பட்டது. அலுவலர்களின் தகவல், தொழில்நுட்ப அறிவை இற்றைப்படுத்தும் வகையில் பயிற்சி நெறிகள் நடத்தப்பட்டதுடன் இலஞ்சம், ஊழல் இல்லாத நேர்மையான அலுவலர்களைக் கட்டி எழுப்புதற்கான நடவடிக்கையும் மனித வளப் பிரிவினால் 2019 இல் மேற்கொள்ளப்பட்டது.

| தொடரில. | நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | பயிற்சி பெற்ற பதவியினர் எண்ணிக்கை | நிகழ்ச்சித்திட்டத்தின் கால அளவு | மொத்த முதலீடு (ரூ.) | | நிகழ்ச்சித்திட்டத்தின் தன்மை (உள்நாடு/வெளிநாடு) | வெளியீடு/பெற்ற அறிவு* |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | உள்நாடு | வெளிநாடு | | |
| 01 | தேசிய அபாயகரமான அவுடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையால் ஒழுங்கு செய்யப்பட்ட நவீன மனோவசிய போதைப்பொருள் அடங்கலான போதைப்பொருட்களை இனங்காணுதல் மற்றும் போதைப் பொருள் பற்றிய சட்ட வலுப்படுத்தல் தொடர்பான பயிற்சிப்பட்டறை | 244 | இருநாட்கள் | 343,905.00 | - | உள்நாடு | தற்போது நாட்டில் பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ள நவீன மனோவசியப் பொருட்கள் அடங்கலாக நவீன போதைப் பொருடகள், அபாயகரமான அவுடதங்கள் பற்றியும் அதற்கான சட்ட ஏற்பாடு சம்பந்தமாகவும் முறைசார் தொழில்நுட்ப அறிவைப் பெறுதல் |
| 02 | அலுவலகப் பணிகளை சரியான முகாமை மற்றும் முறைப்படுத்தல் பொருட்டு மதுவரி நிலையப் பொறுப்பதிகாரிகளிற்கு நடத்தப்பட்ட ஒரு நாள் பயிற்சிப்பட்டறை | 111 | ஒருநாள் | 60,640.00 | - | உள்நாடு | அலுவலக முறையை இற்றைப்படுத்தல், அலுவலக ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளல், கணக்குகளை நடத்துதல், S 5 எண்ணக்கருவை அலுவலகங்களுக்கு பயன்படுத்தல், அலுவலர்களின் ஆளுமை மற்றும் உளப்பாங்கு விருத்தி |
| 03 | சிறந்த அரச சேவை பொருட்டு திணைக்கள அலுவலர்களை ஒழுங்கமைக்கும் நிகழ்ச்சித்திட்டம் | 637 | ஒருநாள் | 632,925.50 | - | உள்நாடு | லஞ்சம், ஊழலற்ற சிறந்த அரச சேவையை வழங்குதற்கான கோட்பாட்டு மற்றும் செயன்முறைப் பயிற்சி |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 04 | மதுவரி அத்தியட்சகர் பொருட்டு ஒருநாள் பயிற்சிநெறி | 23 | ஒருநாள் | 18,310.00 | - | உள்நாடு | மதுவரி அத்தியட்சகரினால் சரியாக அரையாண்டு விசாரணையை நடத்தும் முறை, அலுவலர்களின் நிறைவேற்றுகையை அதிகரித்தல், முகாமையாளர் ஒருவருக்கான பொறுப்புகள், சரியான கணக்கீட்டு முறை, S5 எண்ணக்கருவினை அலுவலகத்தில் பின்பற்றுதல் |
| 05 | மதுவரி அலுவலர்களிற்கு நொதித்த கள்ளுக் கைத்தொழில் பற்றிய ஒழுங்கமைத்தல் நிகழ்ச்சித்திட்டம் | 24 | ஒருநாள் | 4,682.50 | - | உள்நாடு | கள்ளுக் கைத்தொழில் தொடர்பில் பிராந்தியங்களில் சேவைக்கு இணைக்கப்பட்ட மதுவரி அலுவலர்களிற்கு நொதித்த கள்ளுக் கைத்தொழில் ஒழுங்கமைப்பு சம்பந்தமான அறிவைப் பெறுதல் |
| 06 | புதிய மதுவரிக் காவலாளர்களின் முதலாம் வினைத்திறன் தடைகாண் பரீட்சைக்கான இருநாட்கள் பயிற்சிப் பட்டறை | 99 | இருநாட்கள் | அகில இலங்கை மதுவரி சார்ஜன், மதுவரிக் காவலாளர் சங்கத்தால் வழங்கப்பட்டது | - | உள்நாடு | 2016.10.14 மற்றும் 2016.12.14 ஆம் திகதிகளில் நியமனம் பெற்ற மதுவரிக் காவலாளர்களிற்கு முதலாம் வினைத்திறன் தடைகாண் பரீட்சைக்கான விடய அறிவைப் பெறுதல் |
| 07 | அன்றாடப் பணிகளின் பொருட்டு தாபன விதிக்கோவை, அலுவலக முறைமை மற்றும் அலுவலக முகாமைக்கான உற்பத்தித்திறனின் முக்கியத்துவம் பற்றிய ஒரு நாள் பயிற்சிநெறி | 106 | ஒருநாள் | 77,460.00 | - | உள்நாடு | அரச முகாமைச் சேவை அலுவலர்களினதும் மதுவரித் திணைக்கள அலுவலர்களினதும் அன்றாடப் பணிகளின் பொருட்டு தாபன விதிக்கோவை, அலுவலக முறைமை மற்றும் அலுவலக முகாமைக்கான உற்பத்தித்திறனின் முக்கியத்துவம் பற்றிய அறிவு |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 08 | பாதுகாப்பு ஸ்ரிக்கர் வேலைத்திட்டம் சம்பந்தமாக பயிற்சியளித்தல் | 311 | ஒருநாள் | 69,827.00 | - | உள்நாடு | பாதுகாப்பு ஸ்ரிக்கர் வேலைத்திட்டம் சம்பந்தமாகவும் மதுபான விநியோக, விற்பனைப் பிரிவின் செயன்முறை சம்பந்தமாகவும் அங்கீகரிக்கப்பட்ட அடிப்படை நடைமுறைகள் பற்றி மதுவரி அலுவலர்களுக்கும் உரிமதாரர்களிற்கும் தெளிவுபடுத்தல் |
| 09 | தகவல் தொழில்நுட்பமல்லாத அலுவலர்களிற்கான அத்தியாவசிய தகவற் தொழில்நுட்பத் தேர்ச்சிக் கற்கை | 06 | இருநாட்கள் | 78,000.00 | - | உள்நாடு | Ms word இனால் பயன்படுத்தப்படும் தரவுகளை உள்ளீர்த்தல், அச்சுப் பிரதி எடுத்தல், email அனுப்புதல், skype, Viber, WhatsApp, மற்றும் வழு நீக்குதல், Cloud computing, தரவுத் தொடர்பாடல், வலையமைப்புத் தொடர்பாடல் பற்றிய அறிவு |
| 10 | அரச பெறுகைச் செயன்முறை பற்றிய சான்றிதழ்க் கற்கைநெறி | 02 | 10 நாட்கள் | 90,000.00 | - | உள்நாடு | அரச பெறுகை, அதன் முக்கியத்துவத்தை இனங்காணல், விலை மனு கோரல் செயன்முறை, அரச பெறுகைச் செயன்முறை, கேள்வி ஆவணம் தயாரித்தல், பெறுகை மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களின் பொறுப்புகள், ஒப்பந்த உடன்படிக்கை தயாரித்தல் பற்றிய அறிவு |
| 11 | MS project தொடர்பான வேலைத்திட்டம் தயாரித்தல் | 1 | மூன்று நாட்கள் | 18,000.00 | - | உள்நாடு | MS project ஐப் பயன்படுத்தி வேலைத்திட்டம் தயாரித்தல், முகாமைத்துவம் பற்றிய அறிவு |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 12 | குற்றவியல் டிப்ளோமாக் கற்கைநெறி | 7 | ஒரு வருடம் | 280,000.00 | - | உள்நாடு | இலங்கையில் குற்றங்களின் தன்மை, வகை பற்றிய பகுப்பாய்வு அறிவு, குற்றங்கள் அதிகரிப்பதற்கான காரணத்தை இனங்காணல், உலகளாவிய, தேசிய ரீதியாக குற்றத் தீர்ப்பும் அதன் பிரயோகமும் பற்றி அறிதல் |
| 13 | போதைப்பொருள் தடுப்பு முகாமை பற்றிய டிப்ளோமா கற்கை | 2 | ஒரு வருடம் | 150,000.00 | - | உள்நாடு | போதைப்பொருள் தடுப்பு, புனர்வாழ்வுத் துறை பற்றிய அறிவைப் பெறுதல் |
| 14 | போக்குவரத்து முகாமை | 1 | இருநாட்கள் | 7,000.00 | - | உள்நாடு | மோட்டார் வாகனங்களின் புதிய சட்ட விதிகள், காப்புறுதி நடவடிக்கைகள், தொழில்நுட்ப நடவடிக்கைகள், வீதி ஒழுங்குவிதிகள், வாகன உறுதிச் சான்றிதழ் பெறுதல், மோட்டார் வாகனம் பற்றிய வேறு சட்டம், போக்குவரத்து முகாமைப் பொறுப்புகள், பராமரிப்பு மற்றும் சீராக்கற் தகவல்கள் |
| 15 | போதைப்பொருள் சட்டவலுப்படுத்தல் பற்றிய உயர் சான்றிதழ்க் கற்கை | 16 | 03 மாதங்கள் | 400,000.00 | - | உள்நாடு | போதைப்பொருள் கட்டுப்படுத்தல் பொருட்டான முக்கிய பிரிவாகிய சட்ட வலுப்படுத்தலுக்கு ஏற்புடைய கட்டளைச் சட்டங்கள், சர்வதேச, பிராந்திய மாநாடுகள் மற்றும் சட்ட ஒழுங்குவிதிகள் பற்றிய அறிவு |
| 16 | அரச துறை அலுவலர்களுக்கான தெளிவுபடுத்தல் நிகழ்ச்சித்திட்டம் | 2 | ஒருநாள் | இலவசம் | - | உள்நாடு | மனித வள அபிவிருத்தி பற்றிய தேசிய சபை ஊடாக களத் தேர்ச்சிப் பங்களிப்பிலிருந்து பயனுறுதியுள்ள அரச சேவைக் கலாச்சாரத்தைப் பெறும் வகையில் அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டவாறு அரச முகாமைத் திறனை விருத்தி செய்தல் |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 17 | "இழப்புகள், வெட்டி நீக்குதல், புத்தகத்திலிருந்து அகற்றல்" பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 1 | இருநாட்கள் | 8,500.00 | - | உள்நாடு | இழப்புகளை வெட்டி நீக்குதல் பற்றிய அடிப்படைச் சட்டங்கள், சேதங்களை இனங்காணல், இழப்பு பற்றி செயற்படுத்த வேண்டிய அலுவலரை இனங்காணல், புத்தகத்திலிருந்து அகற்றல், இழப்பு பற்றி அறிக்கையிடும் இடாப்பினை இனங்காணல் |
| 18 | MS Access இல் தரவுத் தள முகாமை பற்றிய 3 நாள் பயிற்சிப்பட்டறை | 1 | மூன்று நாட்கள் | 15,000.00 | - | உள்நாடு | ER குறிப்பைப் பயன்படுத்தி டெஸ்க்ரொப் தரவுகளைத் தொகுத்தல் பற்றிய அறிவு, அட்டவணை அமைத்தல், மாதிரிப் படிவம் தயாரித்தல், மாற்றம் ஏற்படுத்தல், விசாரணைகளை உருவாக்கி மாற்றியமைத்தலும் அவற்றில் இருந்து தரவைப் பிரித்தெடுத்தலும் |
| 19 | Microsoft Excel – உயர் பகுப்பாய்வுக் கருவிகள் | 2 | இருநாட்கள் | 34,000.00 | - | உள்நாடு | பல்வேலைத் தாள் புத்தகம் (Multiple worksheet & work book) பற்றிய அறிவு IF, VLOOKUP Power function (ஆற்றல் பணி) பாதுகாப்பு, தரவுப் பகுப்பாய்வு, Macro நிர்மாணமும் செயற்படுத்தலும் |
| 20 | பயிலுனர்களுக்கான பயிற்சி | 1 | மூன்று நாட்கள் | 18,000.00 | - | உள்நாடு | பயிற்சிச் சுழற்சியின் முக்கியத்துவம், பயிற்சியின் பயன், வளர்ந்தோர் கல்வி முறைக்கு எதிரான கற்பித்தல் முறைகள், பயிற்சித் தேவை மதிப்பீடு, மாதிரிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் தயாரித்தல், பயிற்சியாளர் ஒருவரின் வகிபாகம், பயிற்சி மதிப்பீடு என்பன பற்றிய அறிவு |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |
| 21 | அரச கணக்கீட்டு முறை, திறைசேரிக் கொடுக்கல் வாங்கற் கணக்கீட்டு முறை | 2 | இருநாட்கள் | 17,000.00 | - | உள்நாடு | கணக்கியல் பற்றிய அடிப்படைக் கொள்கை, அரச கணக்கீட்டுக் கொள்கை பற்றிய முழுமையான அறிவு, அலுவலகத்தின் அடிப்படைக் கொடுக்கல் வாங்கல்களை கணக்கிலிடுதல், கொடுக்கல் வாங்கல் CIGAS வேலைத்திட்டத்தின் கணக்கீட்டு முறை பற்றிய அறிவு, அரச கணக்கியலில் ஏற்படும் வழுவைச் சீர் செய்வதற்கான அறிவு. |
| 22 | அரச அலுவலர்களிற்கான உயர் MS Excel தேர்ச்சிக் கற்கைநெறி | 1 | இருநாட்கள் | 13,000.00 | - | உள்நாடு | MS Excel பிரயோகப் பாவனை பற்றிய அறிவு |
| 23 | அரச பெறுகை, ஒப்பந்தம் பற்றிய டிப்ளோமா பயிற்சி நெறி | 1 | ஒரு வருடம் | 100,000.00 | - | உள்நாடு | அரச பெறுகையின் நோக்கம், கேள்வி ஆவணம் வடிவமைத்தல், திட்டமிடல், கேள்வி மதிப்பாய்வு, மின்னஞ்சல் பெறுகை, பசுமைப் பெறுகை, உடன்படிக்கை பேணலும் மதிப்பிடலும், அரச உடன்படிக்கைச் சட்டம், வழங்கல் முகாமை என்பன பற்றிய அறிவு |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 24 | சொத்து உபகரணங்களை நிலையான சொத்தாகப் பேணுதல், பராமரித்தல் பற்றிய பயிற்சிப் பட்டறை | 1 | ஒருநாள் | 5,000.00 | - | உள்நாடு | அரச சொத்துகளை இனங்காணல், இலங்கை கணக்கீட்டுத் தர இல. 7, 8 பற்றிய அறிவு, அரச சொத்துக்கான இடாப்பை பேணுதல், சொத்தை அகற்றுதல், விற்றல் சம்பந்தமான பிரயோகப் பயிற்சியின் ஊடாக கணக்குகளை மேற்கொள்ள. |
| 25 | கனிஸ்ட நிறைவேற்று அலுவலர்களிற்கான ஆங்கில் டிப்ளோமா | 2 | ஒவ்வொரு செவ்வாயும் 30 வாரங்களிற்கு | 150,000.00 | - | உள்நாடு | பொதுவான தொடர்பாடல் திறன், உத்தியோகபூர்வ கடிதம் எழுதும் திறன், வாசித்து அறியும் திறன், குறிப்பு எழுதும் திறன், செயல்பாட்டு இலக்கணம், சொல்லகராதி, அறிக்கை எழுதும் அடிப்படைத் தேர்ச்சி |
| 26 | கோப்புகளை முகாமையிடல், பொதுவான அலுவலக நிர்வாகம் மற்றும் தாபன விதிக்கோவை | 2 | மூன்று நாட்கள் | 36,000.00 | - | உள்நாடு | அலுவலக முகாமை, கோப்புகளின் முகாமை, அலுவலகத் தொடர்பாடல், தாபன விதிக்கோவையின் உரிய அத்தியாயத்தை இனங்காணல், அரச துறையை நவீனமயமாக்கல் மற்றும் அலுவலக முகாமை |
| 27 | முகாமைத்துவ உதவியாளர்களிற்கான தகவல் தொழில்நுட்பப் பயிற்சி | 2 | இருநாட்கள் | 26,000.00 | - | உள்நாடு | கணனிச் செயற்பாடு பற்றிய அடிப்படைப் பிரயோக அறிவு |
| 28 | அரச சேவையின் ஒழுக்காற்று நடைமுறை | 1 | மூன்று நாட்கள் | 18,000.00 | - | உள்நாடு | தாபன விதிக் கோவை, அரச அலுவலர்களிற்கு அதன் ஏற்புடைமை, அதிகாரமளித்தல், தவறான நடத்தை அறிக்கையிடல், முழுமையான விசாரணை, குற்றப் பத்திரம் தயாரித்தல், முறைசார் விசாரணை நடத்துதல், சாட்சிக் குறிப்பெடுத்தல், தண்டனை, கட்டளைச் |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | சட்டம், மேன்முறையீடு என்பன பற்றிய அறிவு |
| 29 | வலைமுறைப் பொறியியல் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா | 1 | ஒரு வருடம் | 200,000.00 | - | உள்நாடு | வலையமைப்புப் பொறியியல் பிரிவிற்கான அறிவு, தேர்ச்சி மற்றும் வலைப் பொறியியலாளர் ஆக தொழில் ஆரம்பிக்கத் தயாராகுதல், வலைப் பொறியியல் பற்றிய கற்கைநெறியின் கற்கைத் தேர்ச்சி பெறுதல், தொழில்சார் நிறுவனங்களின் உறுப்புரிமை பெறுதல். |
| 30 | ஆங்கில டிப்ளோமாக் கற்கைநெறி | 1 | ஒரு வருடம் | 35,000.00 | - | உள்நாடு | ஆங்கில மொழியில் கதைத்தல், வாசித்தல், எழுதுதல் பற்றிய தேர்ச்சியை பெறுதல் |
| 31 | Microsoft Application | 20 | ஒருநாள் | இலவசம் | - | உள்நாடு | MS VISIO, MS OFFICE 365, MS PROJECT இல் பிரயோகப் பாவனை பற்றிய அறிவு |
| 32 | நேர் உளப்பாங்கினை நிர்மாணித்தலும் பேணுதலும் | 3 | ஒருநாள் | 10,500.00 | - | உள்நாடு | நிகழ்ச்சித்திட்டம் மற்றும் அவற்றை வெற்றிகரமாக இட்டுச் செல்வதற்கான அறிவு |
| 33 | உற்பத்திச்சாலை, குதம், வடிசாலைகளில் இணைக்கப்பட்டுள்ள அலுவலர்களிற்கான பயிற்சிநெறி | 112 | இருநாட்கள் | 218,700.00 | - | உள்நாடு | உற்பத்திச்சாலை, குதம், வடிசாலை பற்றிய நிர்வாக, சட்ட ஒழுங்குவிதிகள், அவை தொடர்பான கணனிப்படுத்தற் தொழில்நுட்பம் தொடர்பான அறிவு |
| 34 | மதுவரிச் சாரதிகளிற்கான அடிப்படை இயந்திரத் தொழில்நுட்பம், வீதி விதிமுறைகள், சுற்றாடல் இசைவுடன் வாகனம் செலுத்துதல் பற்றிய பயிற்சிநெறி | 95 | இருநாட்கள் | 153,845.00 | - | உள்நாடு | சாரதிப் பணிகளிற்குரிய ஆவணங்களைப் பேணுதல், அதற்குரிய சட்ட விதிகள், சுற்றறிக்கைகள் பற்றிய அறிவு, வாகனப் பராமரிப்பு பற்றிய இயந்திரத் தொழில்நுட்ப அறிவு, பாதுகாப்பாக வாகனம் செலுத்துதல் பற்றிய பயிற்சி, நவீன வாகனம் பயன்படுத்துகையில் நவீன தொழில்நுட்பத்தை இனங்காணுதல், வாகனம் ஓட்டும் உத்திகள் பற்றிய |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | பயிற்சி |
| 35 | மதுவரித் திணைக்களத்தின் சட்டவாக்கம் பற்றிய பயிற்சிப் பட்டறை | 234 | இரு நாட்கள் | 280,500.00 | - | உள்நாடு | இலங்கை மதுவரித் திணைக்களத்தின் விடயப் பரப்பிற்கு ஏற்ப தற்போதுள்ள சட்டம் பற்றிய மீளாய்வு நடத்தப்பட்டு தற்போதைய சமூக, பொருளாதார, கலாச்சார நிலைக்கு பொருத்தமான சட்டவாக்கம் மற்றும் அதன் இற்றைப்படுத்தல் |
| 36 | ஏனைய மதுவரி அலுவலர்களிற்கான நீதிமன்றக் கடமைப் பயிற்சிநெறி | 505 | இரு நாட்கள் | 1,050,155.00 | - | உள்நாடு | நீதிமன்ற கடமைகளினை எதிர்கொள்ளும்போது ஏற்படும் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள், அறிவுறுத்தல் வழங்கலின் ஊடாக சகல வழக்குகளையும் வெற்றிகரமாக மேற்கொள்ள தேவையான அடிப்படைத் தயார்ப்படுத்தல்கள், ஆவணம் தயாரித்தல், திணைக்களக் கட்டளைகள், அதிகாரம், சட்ட நிலை பற்றிய அறிவு |
| 37 | இலங்கை மதுவரித் திணைக்களத்தின் அலுவலர்களுக்கு ஆயுதப் பயிற்சி | 290 | இருநாட்கள் | 667,225.00 | - | உள்நாடு | இலங்கை மதுவரித் திணைக்களத்தின் பதவிநிலை அலுவலர்கள் அடங்கலாக ஆயுதப் பாவனைக்கு அதிகாரமளிக்கப்பட்ட சகல அலுவலர்களிற்கும் ஆயுதப் பாவனை பற்றிய பிரயோகப் பயிற்சி வழங்குதல் |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 38 | முகாமைத்துவ கொள்ளளவு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 1 | 06 நாட்கள் | - | 295,000.00 | வெளிநாடு | குழுக்களைக் கட்டியெழுப்பல், உபாயத்திறனை திட்டமிடல், செயற்படுத்தல் பொருட்டு நிறுவன மீள்கட்டமைப்பு, தலைமைத்துவப் பாதை மற்றும் பங்குதாரர் முகாமைத்துவம் |
| 39 | மனித வள முகாமை பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 2 | 10 நாட்கள் | - | 590,000.00 | வெளிநாடு | தேர்ச்சி, முறை அறிவைக் கட்டியெழுப்பல், தற்போதைய வேகமான வேலைச் சூழலில் மனித வள சவால்களுக்கு முகங்கொடுத்தல், மனித வள, பழக்கங்களிற்காக உறுதியான அடித்தளத்தை அமைத்தல், சகல நிறுவனங்களிற்கும் மனித முதலீட்டை உபாயத்திறன் மிக்க முறையில் ஈடுபடுத்தும் பொருட்டு தலைமைத்துவத்தை தயார்ப்படுத்தல், அபிவிருத்தி சம்பந்தமான பிரச்சனைக்கு பிரயோக அறிவை வழங்கல் மற்றும் சர்வதேச அணுகுமுறைகள் |
| 40 | பிரயோகக் குற்றவியல், மலேசியாவின் குற்றத் தீர்ப்பு முறை பற்றிய சர்வதேச நிகழ்ச்சித்திட்டம் | 3 | 07 நாட்கள் | - | 703,500.00 | வெளிநாடு | குற்றத் தடுப்பு, நிர்வாகம் பற்றிய அறிவு, குற்ற விசாரணை, குற்றவியல் மனோதத்துவம், சிறுவர் பாதுகாப்பு சேவை மற்றும் குற்றவாளிகளிற்கு புனர்வாழ்வு அளித்தல் |
| 41 | நச்சு போதைப்பொருள் பற்றிய ஆணைக்குழுவின் 62 ஆம் அமர்வு – நிறைவேற்றுத்தரக் குழு | 1 | இருநாட்கள் | | 232,000.00 + $1380.00 | வெளிநாடு | உலகளாவிய போதைப்பொருள் பிரச்சனைக்கு முகங்கொடுத்தல், தீர்வு நடவடிக்கை பொருட்டு செயற்படுத்தப்படும் வேலைத்திட்டம் பற்றி கலந்துரையாடல் (2019 இன் இலக்கிற்குரிய திகதியின் அடிப்படையில்) |

அத்தியாயம் 07

# 7. இணக்கப்பாட்டு அறிக்கை

**7.1** நிறுவனத்தின் செயலாற்றுகைக்கு பங்களிக்கும் முறை பற்றிய இணக்கப்பாட்டு அறிக்கை

## 7.1 நிறுவனத்தின் செயலாற்றுகைக்கு பங்களிக்கும் முறை பற்றிய இணக்கப்பாட்டு அறிக்கை

| இல. | ஏற்புடைய தேவைப்பாடு | இணக்கப்பாட்டுநிலை( இணக்கமானது/ இணக்கமற்றது) | இணக்கமற்றதாயின் அதற்கான சிறு விளக்கம் | எதிர்காலத்தில் இணக்கமற்றமையை தவிர்ப்பதற்கு முன்வைக்கும் தீர்வு நடவடிக்கைகள் |
|---|---|---|---|---|
| 01 | **கீழே குறிப்பிட்ட நிதி அறிக்கைகள்/ கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.** | | | |
| 1.1 | வருடாந்த நிதி அறிக்கைகள் | இணக்கமானது | | |
| 1.2 | அரச அலுவலர்களின் முற்பணக் கணக்குகள் | இணக்கமானது | | |
| 1.3 | வணிக, உற்பத்தி முற்பணக் கணக்குகள் (வர்த்தக உற்பத்திக் கணக்குகள்) | ஏற்புடையதன்று | 1.இலங்கை மதுவரித் திணைக்களத்திற்கு இக்கணக்குகள் ஏற்புடையதன்று. | |
| 1.4 | களஞ்சிய முற்பணக் கணக்குகள் | ஏற்புடையதன்று | 2. .இலங்கை மதுவரித் திணைக்களத்திற்கு இக்கணக்குகள் ஏற்புடையதன்று. | |
| 1.5 | சிறப்பு முற்பணக் கணக்குகள் | ஏற்புடையதன்று | 3. .இலங்கை மதுவரித் திணைக்களத்திற்கு இக்கணக்குகள் ஏற்புடையதன்று. | |
| 1.6 | ஏனையவை | ஏற்புடையதன்று | 4. .இலங்கை மதுவரித் திணைக்களத்திற்கு இக்கணக்குகள் ஏற்புடையதன்று. | |
| 02 | **புத்தகங்கள், பதிவுகளைப் பேணுகை (நி.ஒ.445)** | | | |
| 2.1 | அரச நிர்வாகச் சுற்றறிக்கை இல. 267/2018 இன் படி நிலையான் சொத்துகளின் பதிவேடு புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.2 | ஆள்சார் வேதனாதிகள் பதிவேடுகள்/ தனிநபர் ஊதிய அட்டைகள் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.3 | கணக்காய்வு வினாக்கள் பதிவேடு புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| **2.4** | உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் பதிவைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| **2.5** | சகல மாதாந்த கணக்கு சுருக்கங்கள் (CIGAS) தயாரிக்கப்பட்டு உரிய தினத்தில் பொதுத் திறைசேரிக்கு சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| **2.6** | காசோலைகள், காசுக் கட்டளைகள் பதிவேடு புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| **2.7** | பொருட் பதிவேடு புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| **2.8** | இருப்புப் பதிவேடு புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| **2.9** | இழப்புப் பதிவேடு புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| **2.10** | பொறுப்புகள் பதிவேடு புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| **2.11** | அடிக்கட்டைப் புத்தகங்களின் (GAN20) பதிவேடு புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| **03** | **நிதி கட்டுப்பாட்டுக்கான பணிகளை ஒப்படைத்தல் (நி.ஓ. 135)** | | | |
| **3.1** | நிதி அதிகாரங்கள் நிறுவனத்திற்குள் பகிரப்பட்டன | இணக்கமானது | | |
| **3.2** | நிதி அதிகார கையளிப்பு பற்றி நிறுவனத்திற்கு தெரியப்படுத்தல் | இணக்கமானது | | |
| **3.3** | சகல கொடுக்கல் வாங்கலும் இரண்டு அல்லது அதனிலும் கூடிய அலுவலர்களின் ஊடாக இடம்பெறும் வகையில் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டிருத்தல் | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| **3.4** | **2014.05.11** ஆம் திகதிய **171/2004** ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் படி சம்பளப் பட்டியல் மென்பொருள் பொதியை பயன்படுத்துகையில் கணக்காளர்களின் நிர்வாகத்தின் கீழ் நடவடிக்கை எடுத்தல் | இணக்கமானது | | |
| **04** | **வருடாந்த திட்டத்தை தயாரித்தல்** | | | |
| **4.1** | வருடாந்த செயற் திட்டம் தயாரித்தல் | இணக்கமானது | | |
| **4.2** | வருடாந்த பெறுகை திட்டம் தயாரித்தல் | இணக்கமானது | | |
| **4.3** | வருடாந்த உள்ளகக் கணக்காய்வு திட்டம் தயாரித்தல் | இணக்கமானது | | |
| **4.4** | வருடாந்த மதிப்பீட்டை தயாரித்து தேசிய வரவுசெலவுத் திட்ட திணைக்களத்திற்கு (NBD) உரிய திகதியில் சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| **4.5** | வருடாந்த நிதிப்பாய்ச்சல் அறிக்கையை உரிய திகதியில் திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| **05** | **கணக்காய்வு வினாக்கள்** | | | |
| **5.1** | கணக்காய்வாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட தினத்தில் சகல கணக்காய்வு வினாக்களுக்கும் விடையளித்திருத்தல் | இணக்கமானது | | |
| **06** | **உள்ளகக் கணக்காய்வு** | | | |
| **6.1** | நி.ஓ. **134 (2)** DMA/**1-2019** இன்படி வருட ஆரம்பத்தில் கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்தாலோசித்து உள்ளகக் கணக்காய்வுத் திட்டங்களைத் தயாரித்தல் | இணக்கமானது | | |
| **6.2** | *அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாதத்தினுள் பதிலளிக்கப்பட்டது* | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| **6.3** | *2018* ஆம் ஆண்டின் *19* ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் *40(4)* ஆம் உப பிரிவின் பிரகாரம் அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகளும் முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது. | இணக்கமானது | | |
| **6.4** | *134(3)* நிதி ஒழுங்கு விதியின் பிரகாரம் உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் கணக்காய்வாளர் அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டது | இணக்கமானது | | |
| **07** | **கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு** | | | |
| **7.1** | *DMA* சுற்றறிக்கை *1-2019* இன் பிரகாரம் குறைந்தபட்சம் *04* கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் கூட்டங்கள் நடைபெற்றது. | இணக்கமானது | | |
| **08** | **சொத்து முகாமைத்துவம்** | | | |
| **8.1** | *01/2017* ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையின் *07* பந்தியின் பிரகாரம் சொத்து கொள்வனவு மற்றும் அகற்றல் தொடர்பிலான தகவல்கள் கொன்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது. | இணக்கமானது | | |
| **8.2** | மேற்கூறப்பட்ட சுற்றறிக்கையின் *13* ஆம் பந்தியின் பிரகாரம் சுற்றறிக்கையின் விதிகளை அமுல்படுத்தவும் அத்தகைய அதிகாரியை கொம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு அனுப்பவும் பொருத்தமான தொடர்பு அதிகாரி நியமிக்கப்பட்டுளார் | இணக்கமானது | | |
| **8.3** | *05/2016* ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் பொருட்கள் கணக்கெடுக்கப்பட்டு உரிய அறிக்கைகளானது கணக்காய்வாளர் அதிபதிக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டது. | இணக்கமானது | | |
| **8.4** | சுற்றறிக்கையில் குறிப்பிட்ட காலப்பகுதியினுள் வருடாந்த கணக்கெடுப்பு மூலம் வெளிப்படுத்தப்பட்ட மேலதிகம் மற்றும் பற்றாக்குறைக்கான பரிந்துரைகள் மேற்கொள்ளப்பட்டது. | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 8.5 | நிஒ. 772 இன் பிரகாரம் பாவனைக்கு உகந்ததற்ற பொருள்கள் அகற்றப்பட்டது | இணக்கமானது | | |
| 09 | **வாகன முகாமைத்துவம்** | | | |
| 9.1 | குழும வாகனங்களிற்கான நாளாந்த வாகன ஓட்ட அறிக்கை மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கை தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் நாயகத்திற்கு உரிய நேரத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. | இணக்கமானது | | |
| 9.2 | பயன்பாடற்ற வாகனங்கள் பயன்பாடு நீக்கப்பட்டதன் 6 மாதங்களினுள் அகற்றப்பட்டது. | இணக்கமானது | | |
| 9.3 | வாகன ஏடுகள் பராமரிக்கப்பட்டு இற்றைப்படுத்தப்பட்டது. | இணக்கமானது | | |
| 9.4 | ஒவ்வொரு வாகன விபத்து தொடர்பில் நி.ஒ 103, 104, 109 மற்றும் 110 இற்கு அமைவாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. | இணக்கமானது | | |
| 9.5 | 2016.12.29 ஆம் திகதிய் 2016/30 ஆம் அரச நிருவாக சுற்றிக்கையிலன் 3.1 ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கு அமைவாக வாகன எரிபொருள் பாவனை மீளப் பரீட்சிக்கப்பட்டது | இணக்கமானது | | |
| 9.6 | குத்தகை காலம் முடிவடைந்த பின்னர் குத்தகை வாகனங்களின் உரித்து பதிவுப் புத்தகம் மாற்றப்பட்டது. | இணக்கமானது | | |
| 10 | **வங்கிக் கணக்குகளின் முகாமைத்துவம்** | | | |
| 10.1 | வங்கி இணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு, சான்றுபடுத்தப்பட்டு உரியநேரத்தில் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டது | இணக்கமானது | | |
| 10.2 | மீளாய்வு ஆண்டு அல்லது முன்னைய ஆண்டுகளில் காணப்பட்ட செயற்படாத வங்கிக் கணக்குகள் தீர்க்கப்பட்டன | இணக்கமானது | | |
| 10.3 | வங்கி கணக்கிணக்க அறிக்கையில் வெளிப்படுத்தப்பட வேண்டிய நிலுவைகளை வெளிப்படுத்தல், சரிசெய்தல் மற்றும் ஒரு மாதத்தினுள் அத்தகைய நிலுவைகளைத் தீர்த்தல் | இணக்கமானது | | |
| 11 | **நிதி ஏற்பாடுகளின் பயன்பாடு** | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 11.1 | ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளை அதன் வரையறைகள் மீறாது செலவளிக்கப்பட்டது | இணக்கமானது | | |
| 11.2 | நி.ஒ. 94(1) இன் பிரகாரம் ஒதுக்கீட்டு வரம்பை மீறாத பொறுப்புக்கள் வருட இறுதியில் தொடர்ந்திருக்கும் | இணக்கமானது | | |
| 12 | **அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு** | | | |
| 12.1 | எல்லைகளுக்கு இணங்குதல் | இணக்கமானது | | |
| 12.2 | கடன்களில் கால ஆய்வு மேற்கொள்ளப்பட்டது | இணக்கமானது | | |
| 12.3 | ஒருவருடத்திற்கு மேற்பட்ட கடன் மீதிகள் தீர்க்கப்பட்டன | **இணக்கமற்றது** | **தற்போது அறவிடல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.** | |
| 13 | **பொது வைப்பு கணக்கு** | | | |
| 13.1 | காலம் பிந்திய வைப்புகள் தொடர்பில் நி.ஒ. 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டது | இணக்கமானது | | |
| 13.2 | பொது வைப்புகளுக்கான கட்டுப்பாட்டு கணக்கை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 14 | **கட்டுநிதிக் கணக்கு** | | | |
| 14.1 | வருட முடிவில் காசுப் புத்தகத்தின் மீதி திறைசேரி செயற்பாட்டு திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டது | இணக்கமானது | | |
| 14.2 | நி.ஒ. 371 இன் பிரகாரம் வழங்கப்பட்ட தற்செயலான இடைக்கால வழங்கல் பணி முடிவடைந்த பின்னர் ஒரு மாதத்தினுள் தீர்க்கப்பட்டது | இணக்கமானது | | |
| 14.3 | நி.ஒ. 371 இன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட வரையறையை விஞ்சாத தற்காலிக இடைக்கால வழங்கல் | இணக்கமானது | | |
| 14.4 | மாதந்தம் திறைசேரி புத்தகத்துடன் கட்டுநிதி கணக்கின் மீதி கணக்கிணக்கம் செய்யப்பட்டது. | இணக்கமானது | | |
| 15 | **வருமானக் கணக்கு** | | | |
| 15.1 | ஒழுங்குவிதிகள் பிரகாரம் சேகரிக்கப்பட்ட வருமானத்தை மீளளிப்புச் செய்யப்படல் வேண்டும். | இணக்கமானது | | |
| 15.2 | திரட்டப்பட்ட வருமானம் வைப்புக் கணக்கில் வரவு வைக்காது நேரடியாக வருமான கணக்கில் வரவு வைக்கப்பட்டது. | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| **15.3** | நி.ஒ 176 இன் பிரகாரம் வருமானத்தின் மீதியை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| **16** | **மனிதவள முகாமைத்துவம்** | | | |
| **16.1** | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எல்லைக்குள் பணியாளர்களைப் பராமரித்தல் | இணக்கமானது | | |
| **16.2** | அனைத்து ஆளணி அங்கத்தவர்களுக்கும் எழுத்து மூலம் கடமை நிரல் வழங்கப்பட்டது | இணக்கமானது | | |
| **16.3** | 2017.09.20 ஆம் திகதிய 04/2017 ஆம் சுற்றறிக்கையின் பிரகாரம் அனைத்து அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு(MSD) சமர்ப்பிக்கப்பட்டது | இணக்கமானது. | | |
| **17** | **பொது மக்களுக்கு தகவல் வழங்கல்** | | | |
| **17.1** | தகவல் உரிமைச் சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக தகவல் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டு தகவல் பதிவேடு பராமரிக்கப்படுவதுடன் இற்றைப்படுத்தப்படுகின்றது | இணக்கமானது. பிரதி மதுவரி ஆணையாளர் (சட்டம்) இனால் செயற்படுத்தப்பட்டது. | | |
| **17.2** | நிறுவனத்தின் தகவல்கள் பொது மக்களுக்கு வலைத் தளத்தினூடாக அல்லது வேறு ஏதேனும் முறையில் வழங்கப்படுவதுடன் அரச அதிகாரிக்கெதிரான பாராட்டு/ குற்றச்சாட்டினை இந்த வலையத் தளத்தினூடாக அல்லதுவேறு ஏதேனும் முறையில் வழங்க வசதி செய்யப்பட்டுள்ளது. | இணக்கமானது. பிரதி மதுவரி ஆணையாளர் (சட்டம்) இனால் செயற்படுத்தப்பட்டது. | | |
| **17.3** | சட்டத்தின் 08 மற்றும் 10 ஆம் பிரிவுகளின் பிரகாரம் வருடத்திற்கு இருமுறையான அறிக்கை மற்றும் ஆண்டறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. | இணக்கமானது. பிரதி மதுவரி ஆணையாளர் (சட்டம்) இனால் செயற்படுத்தப்பட்டது. | | |
| **18** | **பிரஜைகள் பட்டயத்தை அமுல்படுத்தல்** | | | |
| **18.1** | பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் 05/2008 மற்றும் 05/2018(1) ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நிறுவனமானது ஓர் பிரஜைகள் சாசனம்/ பிரஜைகள் வாடிக்கையாளர் சாசனத்தினை உருவாக்கி அமுல்படுத்தியது | உரிமப் பிரிவின் பொருட்டு இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| **18.2** | சுற்றறிக்கையின் 2.3 ஆம் பந்தியின் பிரகாரம் ஓர் பிரஜைகள் சாசனம்/ பிரஜைகள் வாடிக்கையாளர் சாசனத்தினை உருவாக்கவதையும் அமுல்படுத்துவதையும் கண்காணிக்கவும் மதிப்பிடவும் நிறுவனத்தால் ஓர் முறைமை வடிவமைக்கப்பட்டுள்ளது | இணக்கமற்றது | தலைமை அலுவலகத்தின் உரிமப் பிரிவில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள பிரஜை/ வாடிக்கையாளர் சாசனத்தை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் | பிரஜை/ வாடிக்கையாளர் சாசனத்தை உரிய பிரிவில் காட்சிப்படுத்தலை 2020 இல் மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. |
| **19** | **மனிதவள திட்டத்தை தயாரித்தல்** | | | |
| **19.1** | 2018.01.24 ஆம் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை இல. 02/2018 இனது இணைப்பு 2 இன் வடிவமைப்பின் பிரகாரம் மனிதவள திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது | இணக்கமானது. | | |
| **19.2** | மேற்கூறப்பட்ட மனிதவள திட்டத்தில் ஆளனியினரின் ஒவ்வொரு அங்கத்தவருக்கும் ஒவ்வொரு வருடமும் 12 மணித்தியாளத்திற்கு குறையாத குறைந்தபட்ச பயிற்சிக்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. | இணக்கமானது. | | |
| **19.3** | மேலே குறிப்பிட்ட சுற்றறிக்கை இணைப்பு 01 இல் காட்டப்பட்ட வடிவில் மொத்த அலுவலர்களிற்கும் வருடாந்த நிறைவேற்றுகை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. | இணக்கமானது. | | |
| **19.4** | மேற்படி சுற்றறிக்கையின் பந்தி 6.5 இன் படி மனிதவள மேம்பாட்டுத் திட்டம் தயாரித்தல், திறன் அபிவிருத்தி செயற்படுத்தல் தொடர்பில் ஒரு சிரேஸ்ட அலுவலர் நியமிக்கப்படல் | இணக்கமானது. | | |
| **20** | **கணக்காய்வு பந்திகளிற்கான பொறுப்புக்கூறல்** | | | |
| **20.1** | முந்தைய வருடத்திற்கான கணக்காய்வாளர் நாயகத்தால் வெளியிடப்பட்ட கணக்காய்வுப் பத்திகளில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரிசெய்தல் | இணக்கமானது. | | |